மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

ர் 3 | 15 - 10 - 54 | இதழ் 12

புகழ் மன்றம் நோக்கி வால்டேர்

ன்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5

அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்களின் முதல் முயற்சியும் தோல்வியும்

1942, 1943-ம் ஆண்டுகளில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில், திராவிட இயக்கக் கருத்துடைய மாணவர்கள் மிகவாகப் புகாதிருந்த நிலை. அப்பொழுது காங்கிரஸ் கருத்துடைய மாணவர்களும், கம்யூனிஸ்டுக் கருத்துடைய மாணவர்களும் பல்வேறுதுறை மாணவர் சங்கங்களிலும் ஆதிக்கம் செலுத்திவந்தனர்.

தோழர்கள் க இராமையா (அன்பழகன்) இரா. தண்டபாணி (இளம்வழுதி), இரா. நாராயணசாமி (நெடுஞ்செழியன்) மற்றும் முப்பது மாணவர்கள்தாம் நீதிக்கட்சி (திராவிட இயக்க)க் கருத்துக்களில் பற்றுகொண்டு, 'திராவிடநாடு', 'குடிஅரசு' இதழ்களை வாங்கிப் படித்துக்கொள்கைகளைப் பரப்பிவந்தனர்.

1942-ல் அறிஞர் அண்ணா அவர்களை வரவழைத்துப் பல்கலைக்கழகத்தில் பேசவைக்க வேண்டும் என்று இயக்க மாணவர்கள் ஆர்வங்கொண்டார்கள். அப்பொழுது பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்தவர் நீதிக்கட்சிப் பற்றுடையவரான சர் கே வி. ரெட்டி நாயுடுகாரு ஆவார். தமிழ்ப் பேராசிரியராக விளங்கியவர் தோழர் கா. சுப்பிரமணியப் பிள்ளை எம்.ஏ., எம்.எல். இருவருடைய அனுமதியும் கிடைக்கும் என்ற நம்பிக்கையின்பேரில், அறிஞர் அண்ணா அவர்களை வரவழைப்பதற்கான கடிதப்போக்குவரத்து நடத்தப்பட்டது. அறிஞர் அண்ணா அவர்களும் வருகைதர இசைந்தார்கள். பின்னர் சர் கே. வி. ரெட்டியிடம் மாணவர்கள் அனுமதிகேட்கப் போயினர். அறிஞர் அண்ணா அவர்களுக்கு இடம் அளித்தால், பார்ப்பனப் பேராசிரியர்களும் பிறரும், தம்மைக் குற்றஞ்சாட்டிவிடுவார்களோ என்று அஞ்சிய சர் கே. வி. ரெட்டி நாயுடுகாரு அனுமதிதர மறுத்துவிட்டார். தமிழ்ப் பேராசிரியர் சிபார்சின் பேரிலாவது அனுமதிகிடைக்குமா என்று மாணவர்கள் முயன்றனர். அதுவும் தோல்வியில் முடிந்தது. ஏனெனில் அந்தக் காலத்தில்தான் கம்பராமாயண எதிர்ப்புக் கிளர்ச்சி நாடெங்கும் ஓங்கிநிற்கிறது. பழம் பண்டிதர்களின் கண்டனக்கணைகள் அறிஞர் அண்ணாவின்மீது, போகுமிடத்திலெல்லாம் வீசப்படும்நேரம். அப்பொழுது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இருந்த பண்டிதமணி கதிரேசச் செட்டியாரும், பிற பழம் பண்டிதர்களும் அறிஞர் அண்ணாவுக்கு எவ்வகையிலும் அனுமதி அளிக்கக் கூடாது என்று, பேராசிரியர் கா. சுப்பிரமணியப் பிள்ளை அவர்களிடம் வற்புறுத்திக் கூறிவிட்டனர். பேராசிரியர் கா. சு. பிள்ளைக்கு அண்ணாவை வரவழைப்பதில் வெறுப்புக்கொள்ளவில்லை என்றாலும், சுற்றுச் சூழ்நிலையின் காரணமாக, அனுமதியளிக்கவோ, உதவியளிக்கவோ மறுத்து விட்டார்.

குறிப்பிட்ட நாளில் அண்ணா அவர்கள் சிதம்பரம் வந்து சேர்ந்தார்கள். ஆனால் பல்கலைக் கழகத்தில் பேசுவதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. அறிஞர் அண்ணா அவர்களைக்கொண்டு எப்படியேனும் கூட்டம் நடத்திவிடவேண்டும் என்ற ஆர்வத்தால் கிளர்ந்தெழுந்த மாணவர்கள், புலவர் நா. மு. மாணிக்கம் அவர்களின் ஒத்துழைப்பின்பேரில், சிதம்பரம் இராமசாமிச் செட்டியார் உயர்நிலைப் பள்ளி மண்டபத்தில், பொதுக்கூட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்தனர். தோழர் க. அன்பழகன் மிக ஊக்கத்தோடு பணியாற்றினர். அண்ணா அவர்களும் அக்கூட்டத்தில் கலந்துகொள்ள இசைந்தார்கள்.

கூட்டத்திற்குப் புலவர் நா. மு. மாணிக்கம் அவர்கள் தலைமைதாங்கினர். அறிஞர் அண்ணா அவர்கள் "இளம் உள்ளம்" என்னும் பொருள்பற்றி அழகியதோர் கருத்துமிக்கச் சீரிய சொற்பொழிவாற்றினர்கள்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்களின் முதல் முயற்சி தோல்வியுற்றது என்றாலும், "மீண்டும் வருகிறேன்" என்று அண்ணா அவர்கள் அளித்த ஆறுதல் மொழியின் காரணமாக, மாணவர்களின் உள்ளத்தே மூண்டெழுந்த கனல் அடங்காமல் சுடர்விட்டு எரிந்துகொண்டேயிருந்தது.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

15 - 10 - 54 வெள்ளிக்கிழமை

வெற்றி வாழ்த்துக்கள்

பிரான்ஸ் நாட்டுக்கு மெண்டீஸ் பிரான்ஸ் முதலமைச்சராக வந்த நாட்களிலிருந்து, அகில உலக அரசியல் அரங்கில், மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சிகள் சில நிறைவேறி வருகின்றன. சுதந்திர வேற்றுமைக்கு இடம் அளிப்பதும், உரிமை வேட்கைக்கு மதிப்பு அளிப்பதும் அவரிடம் காணப்படும் அரும் பண்புகளாக இருந்துவருகின்றன.

உலகின் பல்வேறு பகுதிகளில், பன்னெடுங் காலமாக ஆதிக்கம் செலுத்திவரும் பிரான்ஸ், தன் ஆதிக்கத்தைத் தளர்த்திக்கொண்டு, உரிமை வேட்கையுற்று எழுந்த நாடுகளுக்கு உரிமை வழங்கி, நீதியையும், நேர்மையையும், உலக அமைதியையும் காப்பாற்ற முன்வந்திருக்கும் பண்பு, மிகமிகப் போற்றிப் புகழ்வதற்குரியதாகும்.

இந்தியத் துணைக்கண்டத்தில், சென்ற இரு நூறு ஆண்டு காலத்திற்கு மேலாகத், தாம் ஆதிக்கம் செலுத்திவந்த பகுதிகளான பாண்டிச்சேரி, காரைக்கால், ஏனம் பகுதிகளை விட்டு, வெளியேறிவிடும் முடிவுக்குப், பிரான்ஸ் ஆதிக்கக்காரர்கள் வந்தது மட்டற்ற மகிழ்ச்சிக்குரியதாகும். பிரான்ஸின் பிடியில் சிக்குண்டுச் சீரழிந்துகிடந்த பகுதிகளில் வாழ்ந்த மக்கள், தங்கள் பகுதிகளை மீட்டுத் தாயகத்தோடு ஒன்றாக இணைக்கும் முயற்சியில் காட்டிய உணர்ச்சியும், ஊக்கமும், வீரமும் தீரமும் வீண்போகவில்லை. விடுதலை வீரர்களையெல்லாம் வாழ்க! வாழ்க!! என வாழ்த்துகிறோம்! அமைதியான முறையில் அதிகாரத்தை மாற்ற முன்வந்த மெண்டீஸ் பிரான்ஸைப் போற்றுகிறோம்!

இன்பத் திராவிடத்தைக் காணுவதிலே தணியா ஆர்வங்கொண்டு விளங்கும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு, இந்த வெற்றிச் செய்தி ஊக்கமும் உறுதியும் அளிப்பதாகும். என்றேனும் ஒரு நாள், பின்னால், செய்யப்பட வேண்டிய செயல் முன் கூட்டி நடைபெறுவது கண்டு மகிழாமல் எப்படி இருக்கமுடியும். பாண்டிச்சேரி, காரைக்கால், ஏனம் ஆகிய மூன்றும் திராவிடப் பகுதியோடு ஒன்றிவிட்டன என்றால், திராவிட முன்னேற்றக் கழக இலட்சியம் விரைவில் ஈடேற வழி ஏற்படுகிறது என்று பொருள். 1951-ல் சென்னையில் நடைபெற்ற தி. மு. க. மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், செயல்படும் சூழ்நிலை ஏற்பட்டிருப்பது, மிக்க மகிழ்ச்சியளிப்பதாகும்.

தாய்நிலத்தோடு உரிமைவழிச் சேரும் திட்டுகள், எல்லாத்துறைகளிலும் இரண்டறக் கலப்பதற்கான நிலை சிறுகச் சிறுகச் ஏற்படுங்காலம் வரையில், அவை தனி ஆட்சிப்பகுதியாகத் தான் நின்று நிலவும் என்பதில் ஐயமில்லை.

அந்தப் பகுதிகளில் வாழும் மக்களின் அடுத்த விடுதலைக் கிளர்ச்சி திராவிடத்தைத் திராவிடர்க்கு ஆக்குவதுதான். அதற்கிடையில் மொழிவழி மாநிலத்தோடு இரண்டறக் கலப்பதற்கான முயற்சிகளை நாளடைவில் செய்ய வேண்டியது அவர்தம் பணியாகும்.

பிரான்ஸ் வெளியேறுவதை, அன்னிய ஆதிக்கம் அகலுகிறது என்ற முறையில் மீண்டும் மீண்டும் மகிழ்ச்சியுற்று, வெற்றி வீரர்களை வாழ்த்துவோமாக! வெற்றி வாழ்த்துக்கள் உரியவாக!

கவிமணி மறைவு

நாஞ்சில் மாவட்டத்தின் தண்டமிழ்ச் சோலையில் வட்டமிட்டு வந்த கவிக்குயில் மறைந்தது—கவிமணி தேசிகவிநாயகனார் மறைந்தார் என்ற செய்தி நமக்குப் பெருந் துக்கத்தையும், துயரத்தையும் தருகிறது. இயற்கை அழகு சொட்டச்சொட்ட, எளிய சொற்களால், இனிமை பொருந்த, கருத்தாழம் விளங்கக் கவி பாடும் திறம்படைத்த புலவர் பெருமகனாரைத் தமிழகம் இழந்துவிட்டது. அவரது மறைவு தமிழகத்துக்குப் பேரிழப்பாகும். தமிழ், தமிழ் மக்கள், தமிழகம் இவற்றின் வளர்ச்சியிலே தணியா ஆர்வமும் அக்கறையும் காட்டிவந்தார். அவரைப் பிரிந்து வருந்தும் உற்றார் உறவினர்க்கும் நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த பரிவு உரித்தாகுக!

கருத்துக் கதிர்

வாழ்வு மலராததேன் ?

"தெய்வபக்தி இல்லையேல் வாழ்வு மலராது" என்று இந்து அறநிலையப் பாதுகாப்பு மன்றத் தலைவர் தோழர் டி. கே. சங்கரவடிவேலுப் பிள்ளை அவர்கள் சென்னை தருமபுர ஆதின மடாலய தேவாலய சமயப்பிரச்சார நிலையத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவில் பேசும்போது குறிப்பிட்டுள்ளார்.

அவர் குறிப்பிடும் 'தெய்வபக்தி' உடையவர்களுக்கு வாழ்வு எவ்வெவ்வகைகளிலெல்லாம் மலர்ந்திருக்கிறது, அந்தக் 'தெய்வபக்தி' அற்றவர்களுக்கு எந்த எந்த வகைகளிலெல்லாம் மலராமல் போய்விட்டது என்பதற்கான காரண காரிய விளக்கங்களைக் கூறியிருந்திருப்பாரேயானால், எவருக்கும் தெளிவு ஏற்பட வழி பிறந்திருக்கும்.

அவர் குறிப்பிடும் 'தெய்வபக்தி'க்கு நாட்டில் எங்குக் குறைவு ஏற்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை! நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து பேர்களுக்கு மேலாகத்தான் அவர் கூறிடும் 'தெய்வபக்தி'யை முழுக்க முழுக்கக் கொண்டிருக்கிறார்களே! பகுத்தறிவுப் பிரசாரம் நடைபெறுவதன் காரணமாகத் தெய்வபக்தி'த்தேய்ந்துபோய்விடவில்லை.மாறாக வளர்ந்திருக்கிறது என்றுதானே எல்லா மதப்பிரசாரகர்களும் எப்பொழுதும் சொல்லிவருகிறார்கள்! அப்படியிருந்தும் இந்த நாட்டு மக்களின் வாழ்வு எவ்விதக் குறைவுமின்றி மலர்ந்திருப்பதாக எந்தப் பேதையும்கூட ஒப்புக்கொள்ள மாட்டானே! 'தெய்வபக்தி' தேவையான அளவுக்குமேல் முற்றிப்போயுங்கூட, இந்த நாட்டில் மக்களின் வாழ்வு மலரவில்லை என்பதைத்தான் இன்றைய நாட்டின் நிலை அறிவிக்கிறது! எனவே தேவையானது 'தெய்வபக்தி' அல்ல, மனிதப்பற்றுதான்!

ஃ ஃ ஃ

ஆலயப் பணியா? அறிவுப்பணியா?

நாட்டிற்கு ஆலயப்பணி முக்கியமா, அல்லது அறிவுப்பணி முக்கியமா என்று காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராச்சார்ய சுவாமிகளை யாரேனும் கேட்க முற்படுவார்களேயானால், ஆலயப் பணிதான் முக்கியம் என்று உடனே கூறிடச் சுவாமிகள் தயாராக இருக்கிறார்!

இப்பொழுது கோவில்களில் உபரியாகக் குவியும் பணத்திலிருந்து பள்ளிகள், வைத்திய விடுதிகள் முதலியவைகளை நிறுவவேண்டும் என்ற எண்ணம் ஆங்காங்கு வலுத்துவருவதோடு மட்டுமல்லாமல், அதனைச் சிற்சில இடங்களில் நடைமுறைக்கும் கொண்டுவந்துள்ளார்கள். இது சங்கராச்சார்ய சுவாமிகளின் கண்ணையும் கருத்தையும் பெரிதும் உறுத்துகிறது. எங்கே மதச் சம்பிரதாயங்களும், மத ஆதிக்கமும் நாளடைவில் போய்விடுமோ என்ற அச்சத்தால், பள்ளிகள் கட்டுதல், வைத்திய விடுதி ஏற்படுத்துதல் போன்றவைகளை, ஆண்டவன் பணி என்று ஒப்புக்கொள்ள, அவரது வைதீக உள்ளம் இடந்தரவில்லை. "ஆலயங்களில் உபரியாகச் சேரும் பணத்தைப் புனர் நிர்மாணம், பூஜை புனஸ்காரங்கள் ஆகியவற்றிற்கும், அர்ச்சகர்கள், அத்யாபாகர்கள், வேதபாராயணக்காரர்கள், ஓதுவார்கள் ஆகியோர்க்கும் செலவழிக்கவேண்டுமேயல்லாமல், வேறு இனங்களுக்குச் செலவிடக்கூடாது" என்று சங்கராச்சார்ய சுவாமிகள் இந்து அறநிலையப் பாதுகாப்புக் குழுத் தலைவரிடம் அறிவுரை பகர்ந்துள்ளார்.

அன்புப் பணி—அறிவுப்பணியைவிட, ஆலயப்பணியைச், சங்கராச்சாரியார் பெரிது என்று கருதுகிறார்! அவர் கருத்துப்படி அன்புப்பணியும், அறிவுப்பணியும் 'ஆண்டவனுக்காகும் பணி' ஆகாபோலும்!

ஃ ஃ ஃ

வாழவைத்தனவா?

"வாழவேண்டிய முறையில் வாழ்வதற்கு அவசியமான ஞானத்தைப்பெற வேதங்களையும் உபநிஷத்துக்களையும் கற்கவேண்டும்" என்று சென்னை நிதிமந்திரி ஸ்ரீஜத் சி. சுப்பிரமணியக்

கவுண்டர் சுவாமிகள் அவர்கள் திருவாய்மலர்ந்தருளியுள்ளார்கள், எழும்பூர் வேதசபைக் கூட்டம் ஒன்றில்! அவர் வேத சபைக் கூட்டத்திலல்லவா பேசுகிறார்! அப்படிப் பேசாமல் வேறு எப்படிப் பேசமுடியும்! அப்படிப் பேசக்கூடியவர்—அப்படிப் பேசவேண்டும் என்பதற்குத்தானே அந்த வேதசபையினர் அவரை வரவழைத்தனர்! அவர் வேத—உபநிஷத்துக்களையெல்லாம் நன்கு கற்றறிந்து, அவற்றின் பலாபலன்களையெல்லாம் தெரிந்தவரா, என்ன? எப்படிப் பேசினால் அங்கு வீற்றிருந்த 'பிரம்மஸ்ரீ'களின் 'ஆசி'யைப் பெறமுடியும், என்பதுதானே அவருக்கு வேண்டியது! பிறவற்றைப்பற்றித்தான் கவலைப்படவேண்டிய அவசியம் அவருக்கு எப்போதும் இருப்பதில்லையே!

சமுதாயத்தைச் சின்னாபின்னப்படுத்திச் சீரழித்து, வாழ வகையில்லாமல் செய்தவை, வர்ணாச்சிரம தர்மங்களும், சனாதன தர்மங்களும், சாதிப் பிரிவுகளும், குலதர்மங்களும், அவற்றையெல்லாம் உண்டாக்கிக்கொடுத்த வேத உபநிஷத்துக்களுந்தாம் என்பதை அமைச்சர் ஏனோ மறந்துவிட்டார், தெரியவில்லை! வேண்டப்படாத வேதக் கருத்துக்களை எதிர்த்து நின்ற—எதிர்த்து நிற்கும் நெறிகள் தாம் வாழ்வதற்கான வகைகளைச் செய்துவந்திருக்கின்றனவேயொழிய, வேதங்கள் அல்ல! வேதங்களால் ஏற்பட்ட வேதனைகளைத்தான் இந்து சமுதாயம் தாங்கமுடியாத அளவுக்குத் தாங்கிவருகிறதே! இன்னமுமா அந்த வேதனைகளைப் புதுப்பித்துக்கொள்ளவேண்டும்?

ஃ ஃ ஃ

அவர்கள் கடவுள்படைப்பு அல்லவோ!

கடவுள் மதம் இவற்றில் நம்பிக்கை தேவையில்லை, மனித ஆற்றலிடத்து மட்டும் நம்பிக்கைக் கொண்டால் போதும் என்று தெரிவிக்கும் திராவிடக் கழகம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவற்றோடு கலந்துகொள்ளக் கூடாது என்று இந்தியக் கிருத்தவர்களுக்கு யோசனை தெரிவித்து, அண்மையில் திருச்சியில் கூடிய மத்திய தமிழ்நாடு இந்தியக் கிருத்தவர்கள் மாநாடு தீர்மானம் ஒன்று நிறைவேற்றியுள்ளதாம்.

கடவுள் நம்பிக்கை அற்றவர்களோடு கலந்து, அவர்களுக்குக் கடவுள் நம்பிக்கையை ஊட்ட எண்ணாமல் கடவுள் நம்பிக்கையைத் தங்கள் அளவோடு நிறுத்திவைத்துக்கொள்ள மாநாட்டினர் எண்ணுகிறார்கள்போலும்! அதற்குக் காரணம் கடவுள் நம்பிக்கை அற்றவர்கள் ஆண்டவன் படைப்பு அல்ல என்று கருதுகிறார்களோ? அல்லது அவர்களையும் தம் வழிக்குத் திருப்பும் ஆற்றலை ஆண்டவன் தமக்குக் கொடுக்கவில்லை என்று கருதுகிறார்களோ? தெரியவில்லை!

ஃ ஃ ஃ

வருத்தப்பட்டால் போதாது; வழிவேண்டும்

“தொழில் நுட்பத் துறையிலும் நம் நாடு தன்னிறைவு நிலை எய்தவேண்டும். தொழில் நுட்பம் அறிய அந்நிய நிபுணர்களையே நம்பி நிற்பது படிப்படியாக மறையவேண்டும். அயலார் உதவியை எதிர்பார்ப்பது மனச்சோர்வை உண்டுபண்ணுவதுடன், உற்பத்திச் செலவையும் பெருக்கிவிடுகிறது. நம் நாட்டவரே தொழில் நுட்பங்களையெல்லாம் அறிந்துணர்ந்து காரியங்களைச் செய்ய முற்பட்டால் உற்பத்திக் கிரையமும் குறையும்” என்று மத்திய அரசாங்க உற்பத்தி இலாகா மந்திரி தோழர் கே. வி. ரெட்டி அவர்கள், திருவொற்றியூர் இரயில்வே ஸ்டேஷன் அருகாமையில் ரேடியோ மின்சார சாதனங்கள் கம்பெனியின் புதிய தொழிற்சாலையைத் திறந்துவைக்கும்போது வருத்தப்பட்டுக் குறிப்பிட்டுள்ளார். மந்திரியாரைப்போல நாமும் அதுகுறித்து வருத்தப்படத்தான் செய்கிறோம்; ஆனால் அந்த வருத்தத்தைப் போக்குவதற்கான வழி வகைகளைக் காணுவது யார்? மக்களா?—மந்திரியாரா?

இந்தியாவில் இன்று விளங்கும் தொழில் நுட்ப நிபுணர்களையாவது சரியான முறையில் இந்திய அரசாங்கம் பயன்படுத்திக்கொண்டிருக்கிறதா என்றால், இல்லை என்ற பதிலைத்தானே உண்மை நிலை தெரிவிக்கிறது! எத்தனையோ பேர் மேனாடுகள் சென்று தொழில் நுட்பத் துறைகளில் பயிற்சிபெற்று வருகிறார்கள். அவர்களது திறனையெல்லாம் பயன்படுத்திக்-

கொள்ளும் வாய்ப்பையும், வசதியையும் இன்னமும் சரியான முறையில் இந்திய அரசாங்கம் ஏற்படுத்திக்கொடுக்கவில்லையே! மேனாடு போய்த் திரும்பிவந்தவர்களில் பெரும்பாலோரின் திறன் பயன்படுத்தப்படாமல், பாழ்படும் நிலையில்தான் விடப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கம் இதில் சிறிது கவனம் செலுத்த முற்படுமேயானால், எவ்வளவோ அளவுக்குத் தன்னிறைவுநிலை ஏற்படும் என்பது மட்டும் உறுதி. வருத்தப்பட்டால் மட்டும் போதாது; வழி காணவேண்டும்!

ஃ ஃ ஃ

நண்பர் நேருவா?
அல்லது நவாப் நேருவா?

"ஏழைகள் வாழும் சேரிகளைப்பற்றிச் சிந்திக்கும்பொழுதெல்லாம் என் இரத்தம் கொதிக்கிறது. சேரிகளில் இடிந்துபோன, அசுத்தமான வீடுகளை வைத்துக்கொண்டு, அவற்றிலிருந்து பணம் சம்பாதிக்க விரும்பும் சேரிச் சொந்தக்காரர்களைச் சிறையிலிட்டுத் தண்டிக்கவேண்டும்........இந்தச் சேரிகளை அப்புறப்படுத்த முயற்சி செய்கையில் நஷ்ட ஈடு பிரச்சினைகளைப்படுகிறது. இந்தச் சேரிகளில் வாழும் மக்கள் அனுபவித்து வரும் அவமானங்களின் காரணமாக இச்சேரி சொந்தக்காரர்களுக்கு எவ்வித நஷ்டஈடும் கொடுக்க முடியாது. எப்படியிருந்தபோதிலும் இந்தச் சேரிகளை நாம் எரிக்க வேண்டும். இங்கிலாந்தில் சேரிகளை அப்புறப்படுத்துவதற்காக நஷ்டஈடு கொடுப்பதில்லை. இந்த நாட்டில்தான் நஷ்டஈடு அளிக்கும் சம்பிரதாயம் துர்அதிர்ஷ்டவசமாக வழக்கத்திலிருந்துவருகிறது" என்று பண்டித நேரு பம்பாய்க்கு அருகில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசியிருக்கிறார். பண்டித நேரு, மக்களின் நண்பராக நின்று பேசியுள்ளாரா அல்லது பிரஜைகளின் நவாப்பாக நின்று பேசியுள்ளாரா என்று பார்த்தால் அவர் 'நவாப் நேரு' வாகநின்றுதான் பேசியிருக்கிறார் என்பது எவருக்கும் தெளிவாகும்.

சேரிமக்கள் அவமானகரமான வாழ்க்கை நடத்துவதைக் குறித்துப்,பண்டித நேரு, அவர்கள்மீது சீறிவிழுகிறார்; அவர்களைச் சிறையிலடைப்பேன் என்கிறார்; அவர்கள் வீட்டைச் சுட்டெரிப்பேன் என்கிறார். சேரிமக்கள் அவமானகரமான வாழ்க்கை நடத்துவதற்கு அவர்களல்லவே காரணம்! இந்த நாட்டுச் சமுதாயப் பழக்க வழக்கமும், சட்டமும் அல்லவா அவர்களை அந்த நிலைக்குக் கொண்டுவந்தவை! சேரி வாழ்வு நல்ல வாழ்வு என்ற காரணத்தினாலா, சேரி மக்கள் சேரியில் வாழ்கிறார்கள்? வறுமை, ஏழ்மை, தீயச் சமூகக் கட்டுப்பாடு அல்லவா அவர்களைச் சேரிக்குத் துரத்தின! சேரி வாழ்வு, காணும்போது மட்டும் நேருவின் கண்ணை உறுத்துகிறது; ஆனால் அது சேரி மக்களின் உயிர் வாழ்வைப் பரம்பரைபரம்பரையாக அல்லவா உறுத்திவருகிறது? பண்டித நேரு தமக்கு இரத்தம் கொதிக்கிறது என்கிறார்! அது சேரிமக்களின் அல்லலைக் காணும்போது இரக்கத்தின் காரணமாக ஏற்படும் நிலையா என்றால், அல்ல; சேரிமக்களின் அவமானத்தைத் தாம் காண நேரிடுகிறதே என்ற கோபத்தின் காரணமாக ஏற்படும் நிலையாகும்! மகாராஜாக்களுக்கும், ஜமீன்தாரர்களுக்கும் நஷ்டஈடு கொடுக்க இசையும் நேரு, சேரி மக்களுக்கு நஷ்டஈடு கொடுக்கவேண்டும் என்னும் போது ஆத்திரப்படுகிறார். சேரியை விட்டு விரட்டப்படுபவர்களுக்கு, வேறு எந்த வசதி வெளியே இருக்கிறது என்று கருதி, பண்டித நேரு நஷ்டஈடு கொடுக்கக்கூடாது என்று கூறுகிறாரோ, தெரியவில்லை! பண்டித நேரு, பெரிய மனதுவைத்துச் சேரியோடு அங்கு வாழும் மக்களையும் சுட்டெரித்துவிடுவாரேயானால், பிறகு வேண்டுமானால் யாரும் நஷ்டஈடு கேட்க மாட்டார்கள்!

இங்கிலாந்திலே நஷ்டஈடு கொடுக்கப்படுவதில்லை என்றால், அங்கு வேறு வழிவகைகளை ஏற்படுத்திக்கொள்வதற்கான வாய்ப்புகள் உண்டு, இங்கே அம்மாதிரி உண்டா என்று பண்டிதரைக் கேட்க விரும்புகிறோம். இந்தியா இங்கிலாந்து ஆகுமா?

சேரிகள் சேரிமக்களின் விருப்பத்தின்பேரில் நிலவவில்லை என்பதையும், இந்திய அரசாங்கத்தின் தயவின்பேரில்தான் நின்று நிலவுகின்றன என்பதையும், சேரிமக்களை நகரமக்களோடு மக்களாக ஆக்கவேண்டிய பொறுப்பு இந்தியப் பிரதமரைச் சார்ந்ததாகும் என்பதையும் பண்டித நேருவுக்கு, இல்லை நவாப் நேருவுக்கு நினைவுறுத்துகிறோம்!

பண்டைப் படைத்திறம்

பண்டைத் தமிழ் வேந்தர்கள் வண்மை, வீரம், புகழ் ஆகியவற்றிற்கு மிகப் பேர்போனவர்கள் என்பது சங்கநூல்களால் அறியக்கிடக்கும் பேருண்மையாகும். அவர்களின் வீரம் இமயம் சென்று முட்டியது. சேரனது வில்லும், சோழனது புலியும், பாண்டியனது மீனும் வெற்றியின் அடையாளங்களாக இமயத்தில் பொறிக்கப்படும் வாய்ப்பு பலதடவை ஏற்பட்டிருக்கின்றன. தமிழரின் வீரம் காழகத்தையும், கடாரத்தையும், ஈழத்தையுங்கூட எட்டிப் பார்த்தது என்னலாம்.

வலிமையும் கட்டுப்பாடும் மிக்கப் போர்ப் படைகளை அமைத்து, வளர்த்துக், காப்பாற்றவும், அவற்றைப் போர்க்காலங்களில் இயக்குவிக்கவும் தேவையான போர்ப்படை இலக்கணங்களைப், பண்டைத் தமிழர்கள் மிகச்சிறந்த முறையில் கற்றறிந்திருந்தனர். ஒரு நாட்டிற்குப் படை எவ்வளவு முக்கியமானது என்பதைத் தொல்காப்பியமும், திருக்குறளும், பிற சங்க இலக்கியங்களும் மிகச் சிறப்பித்துக் கூறுவதைக் கொண்டு, பண்டைத் தமிழர்கள் படையின் இன்றியமையாமையைக் குறித்து, எவ்வளவு ஆக்கமும் ஊக்கமும் கொண்டிருந்தனர் என்பதை, ஒருவாறு ஊகித்தறிந்து கொள்ளலாம்.

பண்டைக் காலத்தில், தமிழகத்தில், போரிடும் இடத்தைப் பொறுத்துப், போர்ப்படை, நிலப்படை என்றும், கப்பற்படை என்றும் இருவகையாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

நிலப்படை, போர்வீரர்களை இட்டுச் செல்லும் ஊர்தியைப் பொறுத்துத் தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை என்று நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

காலாட்படை ஏந்தியிருக்கும் போர்க்கருவியைப் பொறுத்து விற்படை, வாட்படை, வேற்படை என்று மூவகையாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

பொதுவாகப் போர்வீரர்கள், அவர்கள் எப்படையினைச் சார்ந்தவராக இருப்பினும் பொருநர் என்றும், படையாட்கள் என்றும், மறவர் என்றும், படைஞர் என்றும் அழைக்கப்பட்டனர்.

சங்க காலத் தமிழ் வேந்தர் மூவரும் கப்பற்படையைச் சிறப்பாக வைத்திருந்தனர் என்ற குறிப்புகள் சங்க இலக்கியங்களில் ஆங்காங்கு காணக்கிடக்கின்றன. வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்டே, வடவலம்ப நின்ற பாண்டியன் என்ற பாண்டிய மன்னன் கப்பற்படை கொண்டு சாலி என்னும் ஜாவாத் தீவை வென்றான் என்ற செய்தி, பத்துப்பாட்டிலுள்ள மதுரைக் காஞ்சியால் அறியப்படுகின்றது. கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்த சேரமான் கடலோட்டிய வேல்கெழுகுட்டுவன் செய்த கடற்போரைப் பற்றிப் புறநானூற்றின் 126-வது செய்யுள் குறிப்பு அறிவிக்கின்றது. கி. பி. பத்துப் பதினோராம் நூற்றாண்டில் வாழ்ந்த முதலாம் இராசராச சோழன் இலங்கையையும், 'முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரம்' என்று சொல்லப்படும் மால்திவ் தீவுகளையும் கடற்படை கொண்டு வென்றதையும், காந்தளூர்ச்சாலை என்னுமிடத்தில் மேற்குக் கடற்கரையோரத்தில் மாற்றாரின் கப்பற்படையை முறியடித்ததையும் கல்வெட்டுகள் அறிவிக்கின்றன. இராசராச சோழன் மகன் இராசேந்திரன் நக்கவாரம் (நிக்கோபார்), மலையா (மலேயா), சுமதுரா (சுமத்ரா) ஆகிய நாடுகளைக்

கப்பற்படையின் உதவியால் வென்று மீண்டதைக் கல்வெட்டுகள் சான்று பகர்கின்றன.

இந்தக் காலத்தில் மேடுபள்ளங்களைக்கடக்கவும், கோட்டைகளைத் தகர்க்கவும், 'டாங்கிப் படை' எப்படிப் பயன்படுகிறதோ, அப்படியே அந்தக்காலத்தில் 'யானைப்படைத்' தமிழரசர்க்குப் பெரிதும் பயன்பட்டுவந்தது. ஒரு சமயம் சோழ மன்னனிடம் அறுபதினாயிரம் யானைகள் இருந்ததாகச் சீன வழிப்போக்கன் ஒருவன் குறிப்பு ஒன்று எழுதிவைத்துள்ளான். யானைகள் கிடைக்கப் பெறாத சோழநாட்டிலேயே இவ்வளவு யானைகள் இருந்தனவென்றால், யானைகளை மிகுதியாகவுடைய சேர-பாண்டிய நாடுகளில் எவ்வளவு யானைகள் இன்னமும் கூடுதலாக இருந்திருக்கவேண்டும் என்பதை நாம் ஒருவாறு உய்த்துணர்ந்துகொள்ளலாம்.

யானைப்படை வீரரை யானைமறவர், ஆனையாட்கள், ஆனைப்பாகர், குஞ்சரமல்லர், அத்திமல்லர் என்னும் பல பெயர்களால் அழைத்து வந்தனர். அக்காலத்தரசர்கள் யானைப்படையின் அணிவகுப்பைக் கண்டு மகிழ்வதிலே மிக விருப்பஞ்செலுத்திவந்தனர் யானைப்படையின் அணிவகுப்பைக் காண்பது பொதுமக்களுக்கும் பெருமகிழ்ச்சியைத் தருவதாகும். யானைப் படை, போர்ப்படைகளுள் மிகச்சிறந்த படையாகக் கருதப்பட்டது.

குதிரைப்படைக்குத் தேவையான குதிரைகள், அரபி நாட்டிலிருந்து, கடல்வழியாக ஏராளமாகத் தருவிக்கப்பட்டன. அக்குதிரைகளைக் கொண்டு, இங்கும் குதிரைகள் உற்பத்தி செய்துகொள்ளப்பட்டன. இங்குள்ள காடுகளில், அரபிக்குதிரைகளை வாங்கி வளரவிட்டுக், குதிரைகளை மேலும் மேலும் பெருக்குவதற்கான வழிவகைகளையும் செய்தனர். குதிரை வீரர்கள் குதிரை மறவர் என்றும், இவுளி மறவர் என்றும், பிற்காலத்தில் குதிரைச் சேவகர் என்றும் அழைக்கப்பட்டனர்.

பட்டத்து யானை, பட்டத்துக் குதிரை, அரசர்கள் — அமைச்சர்கள் — படைத் தலைவர்கள் முதலியோர் ஏறும் யானை குதிரைகள், மேலும் போரிடுவதிற் சிறந்த யானை குதிரைகள் ஆகியவற்றிற்குத் தனித்தனிப் பெயரிட்டு அவைகளைச் சிறப்பாக அழைத்து வந்தனர்.

சங்ககாலத்திற்குப் பிறகு தேர்ப்படை அழிந்துவிட்டது. சங்ககாலத்தரசர்கள் யானை பூட்டப்பட்ட தேர்களையும், குதிரை பூட்டப்பட்டத் தேர்களையும் பல்வேறுவகையில் படைகளாகப் பயன்படுத்தி வந்தனர்.

போர்ப்படைகளைத், தொண்டுசெய்யும் காலத்தைப் பொறுத்து, மூலப்படை என்றும் கூலிப்படை என்றும் இரண்டாக வகுத்திருந்தனர். பகைவர் படையெடுத்துவந்து தாக்காதவாறு நாட்டைப் பாதுகாத்துக்கொள்ளவும் உள்நாட்டுக் கலவரங்கள் ஏற்படாமல் அமைதியை நிலைநாட்டவும், அரசன் ஆணைகளைத் தேவையானபோது நிறைவேற்றிவைக்கவும் எப்பொழுதும் ஒரு படை கையிருப்பில் வைக்கப்பட்டிருந்தது. அந்தப் படைக்குத்தான் மூலப்படை என்று பெயர். போர்க்காலங்களில் தேவையையொட்டிப் புதிய புதிய படைகள் சேர்க்கப்படும். போர் முடிந்து அமைதி ஏற்பட்டுவிட்டால் அந்தப் படைகள் கலைக்கப்பட்டுவிடும். அத்தகையப் படைக்குக் கூலிப்படை என்று பெயர். ஊதியம் என்ற முறையில் இல்லாமல், கூலிக்காக அவ்வப்போது கூட்டப்படும் படையாக அது விளங்கியதால், அதற்குக் கூலிப்படை என்று பெயரிட்டழைத்தனர்.

படையைச், சேர்க்கப்படும் இடத்தைப் பொறுத்து, நாட்டுப்படை என்றும், காட்டுப் படை என்றும் இருவகையாகப் பிரித்தனர். நாட்டுமறவர்களைக் கொண்டு நாட்டில் அதாவது மருதநிலத்தில் தொகுக்கப்படும்படையாக இருந்தால் அதற்கு நாட்டுப்படை என்றும், காட்டு மறவர்களைக்கொண்டு காட்டில் அதாவது பாலைவெளியில் தொகுக்கப்படும் படையாக இருந்தால் அதற்குக் காட்டுப்படை என்றும் கூறிவந்தனர்.

சேரும் பக்கம் பற்றிப் படையைப் பகைப் படை என்றும், துணைப்படை என்றும் பிரிப்பதுண்டு. எதிர்த்துவரும் படையாக இருந்தால் அதனைப் பகைப்படை என்றும், துணைக்கு வரும் படையாக இருந்தால் அதற்குத் துணைப் படை என்றும் அழைத்துவரலாயினர்.

போர் ஏற்படும் [illegible] காரணமாகவும், அரசப் பற்றின் காரணமாகவும் பொதுமக்கள் கூலி ஏதும் பெற்றுக்கொள்ளாமல், தாமாகவே முன்வந்து, படையில் சேர்ந்து பணிபுரிவதுண்டு. அப்படிச் சேரும் ஊர்மக்கள் படைக்குக் குடிப்படை என்று பெயர்.

போர்க்காலத்தில் கொள்ளப்படும் பெரும் படை, அமைதியான காலத்தில் தேவைப்படாதாகையால், மூலப்படையொழிந்த பிற படைகளெல்லாம் கலைக்கப்பட்டுவிடும். மூலப்படையின் பகுதிகள் தலைநகரிலும், பிற முக்கியமான நகரங்களிலும், எல்லைப்புறங்களிலும், புதிதாக வெல்லப்பட்ட பகைவர் நாடுகளிலும் நிறுத்தி வைக்கப்படும். அப்படி நிறுத்திவைக்கப்படும் படை நிலைப்படை என்று பெயர் பெறும். முதற் குலோத்துங்கன் கோட்டாறு என்னுமிடத்தில் நிலைப்படையொன்றை நிறுத்திவைத்திருந்த செய்தியைக் கல்வெட்டு ஒன்று அறிவிக்கிறது. கலைக்கப்பட்ட படையைச் சேர்ந்தவர்கள் அவரவர்க்குரிய தொழில்களைச் செய்து வருவர்.

நிலைப்படை நிறுத்தப்பட்ட நகரைப் படைவீடு என்றும், அது நிறுத்தப்பட்ட நிலப்பகுதியைப் படைப்பற்று என்றும், அது குடியிருக்கும் வீட்டுத்தொகுதியைப் படைநிலை என்றும் அழைக்துவந்தனர். நிலைப்படையினர் தம் மனைவி மக்களுடன் கூடிவாழ்ந்துவந்தனர்.

அக்காலத்தரசரும் படைவீரர்களும் மற்போர், படைக்கலப்போர் ஆகிய இருவகைப் போரையும் பயின்றுவந்தனர்.

மற்போர்ப் பயிற்சி பெறுவதற்காக ஆங்காங்கு போரவை என்னும் பயிற்சிக்கூடம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. அதனை முரண்களரி என்றும் அழைப்பர். சோழமன்னனுன கோப்பெருநற்கிள்ளி போரவை ஒன்று நடத்திவந்த காரணத்தால், அவனைப் போரவைக் கோப்பெருநற்கிள்ளி என்று வழங்கினர். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனும், கோப்பெரு நற்கிள்ளியும் மற்போர் புரிவதில் மிகச்சிறந்து விளங்கினர் என்ற செய்தியைப் புறநானூற்றின் 77-வது 80-வது செய்யுட்கள் அறிவிக்கின்றன.

போர்ப்பயிற்சி பெறுபவர்கள், மனிதனின் உடல் போல் நொய்தானதாக இருக்கும் முருங்க மரத்தின் அடிப்பகுதியைத் தொலை [illegible] யும், வீசி, [illegible] வீட்டுப் பழகுவர்,

அரண்மனையை ஒட்டி விளங்கும் செண்டுவெளி அல்லது வையாளி வீதி எனப்படும்வெட்டைவெளி நிலத்தில், வாசிவாரியர் என்போர் போர்க்குதிரைகளுக்குப் பயிற்சியளிப்பர். இரு சாரிகள், ஐந்துகதிகள், பதினெட்டு மண்டிலங்கள் போன்ற பயிற்சி முறைகளைக் குதிரைகளுக்குப் பயிற்றினர். வாசிவாரியர்களில் தலைவனாக விளங்குபவனுக்கு அரசவாரியன் என்று பெயர். யானைகளுக்குப் போர்பயிற்சி அளிப்பவர்க்குக் காழோர்வாதுவர் என்று பெயர்.

படைகள் போர்க்கருவி, ஊர்தி, இனம், நிலம், மொழி, தொண்டு, இடம், வயது, வலிவு ஆகியவைகளைப் பொறுத்துப் பல பிரிவுகள் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பிரிவையும் தனியே பிரித்தறிவதற்குத் தனித்தனிச் சிறப்புப்பெயர்கள் இடப்பட்டன. அவை ஒவ்வொன்றும் அரசனுடைய வெற்றிப் பெயர்களை அடைமொழியாகக் கொள்ளுவது மரபு. அரசனுக்குப் பாதுகாப்பாக வலது பக்கத்திலும், இடது பக்கத்திலும் அவன் தங்கும்போதும் செல்லும்போதும் உடனிருப்பவர்கள் வலங்கை இடங்கை என்று அழைக்கப்பட்டனர். சிறுதனம், பெருந்தனம் என்றும் சில பிரிவுகள் பிரிக்கப்பட்டன.

'வில்லிகள் வாள்பெற்ற கைக்கோளர்', 'பராந்தகக் கொங்கவாளர்', 'பண்டிதச் சோழத் தெரிந்த வில்லிகள்', 'உத்தமச் சோழத் தெரிந்த அந்தளகத்தார்', 'சிறுதனத்து வடுகக் காவலர்', 'வலங்கைப் பழம்படைகளிலார்', 'பலவகைப் பழம்படைகளிவார்', 'சிங்களாந்தகந்தெரிந்த குதிரைச் சேவகர்', 'மும்முடிச் சோழத் தெரிந்த ஆனைப்பாகர்', 'பெருந்தனத்து ஆனைப்பாகர்' என்பவைகள் இடைக்காலத்தில் வழங்கப்பட்ட சில படைப்பிரிவுகளின் பெயர்களாகும்.

இடைக்காலத்தில் படைத்தலைவர்க்குப்படைமுதலி, தண்டநாயகன், சேனை முதலி, சேனாபதி, சாமந்தன் என்னும் பெயர்களும், பெரும்படைத் தலைவர்க்குப் பெரும்படைமுதலி, சேனாவரையன், சேனாதிராயன், மகாதண்டநாயகன், மகாசமந்தன் என்ற பெயர்களும் வழக்காற்றில் இருந்துவந்தன. நாயகன் என்ற பெயர்தான் தமிழகத்தில் நாய்க்கன், நாய்க்கர் என்றும், தெலுங்கு நாட்டில் நாயுடு என்றும், [illegible] என்றும் மருவி வழங்குவதா [illegible] உயர்வைக் குறிக்கவேண்டி முதலியார் என்று மாறிற்று.

படைவீரர்களில் மிக்கத் திறம்படைத்தவர்கள் படைத்தலைமைக்குப் பொதுவாக அமர்த்

அட்டைப்பட விளக்கம் :

பதினெட்டாவது நூற்றாண்டில், ஐரோப்பாக் கண்டத்து வரலாற்றில் மாபெரும் மாறுதலை உண்டாக்கிய எழுத்தாளர், வால்டேர் ஆவார். அவருடைய பேனாவிலிருந்து உதிர்ந்த சிந்தனைத் துளிகள் பல நூற்றாண்டுகளாக சமுதாயத்தைப் பிடித்திருந்த மூடநம்பிக்கைகளை —மதப்பித்தங்களை முறியடித்தன. பிரெஞ்சுப் புரட்சிக்கு வழி வகுத்த சிந்தனைச் செல்வர்களில் வால்டேரின் பெயர் முதலில் நிற்கிறது.

பிற்காலத்தில் வால்டேர் பெரும் புகழுடன் போற்றப்பட்ட போதிலும், அவர் வாழ்ந்த காலத்தில், 'நாத்திகன்', 'சூத்தாடி', 'பித்தன்', 'சனியன்', 'சாத்தானின் தூதன்' என்று ஏசப்பட்டார், சிறையிலேதள்ளப்பட்டார், நாட்டைவிட்டுத் துரத்தப்பட்டார். அவர் இறந்த பின்னும், அவரது பிணத்தை ஊர்க் கல்லறைத் தோட்டத்தில் புதைக்க, பாதிரிமார் அனுமதிக்கவில்லை. யாருக்குந் தெரியாத சிறு இடத்தில், அவரது பிணம் புதைக்கப்பட்டிருந்தது.

வால்டேர் இறந்தது 1778-ம் ஆண்டில். அதற்குப்பின் பதினொரு ஆண்டுகள் கழித்து பிரெஞ்சுப் புரட்சி மூண்டது. மக்களின் படை வெற்றி கண்டது!

பதினொரு ஆண்டுகளாக வால்டேரின் பிணம் யாரும் காணாததொரு மண்மேட்டின் கீழ் அடங்கியிருந்தது. ஆனால் மக்கள் அவனை மறந்துவிட்டதாகத் தெரியவில்லை.

புரட்சி தோன்றி, பாஸ்டில் வீழ்ந்ததும் "வாழ்க வால்டேர்!" என்றுதான் புரட்சிவீரர்கள் ஆரவாரித்தனர்.

புரட்சி இயக்கத்தினர் அரசாங்கத்தைக் கைப்பற்றியதும், "பாந்தியான்" என்ற அழகிய மண்டபத்தைக் கட்டிமுடித்தனர், அதில் புகழ்பெற்ற பெரியோர்களை அடக்கஞ் செய்வதற்காக.

'பாந்தியான்' கட்டிடம் தயாரானதும், சின்னஞ்சிறு மண்மேட்டின் கீழ் கிடந்த வால்டேரின் எலும்புத் துண்டுகள், சலவைக்கல்லாலான பெட்டியில் அடக்கஞ் செய்யப்பட்டு, ஊர்வலமாக பாரிஸ் நகருக்குள் கொண்டுவரப்பட்டது. நகரமக்களனைவரும் ஒருங்குகூடி, அந்த ஊர்வலத்தை வரவேற்றனர். மிகுந்த ஆடம்பரத்துடன், செங்கோலோச்சிய மன்னனுக்குக் கிடைக்காத மரியாதையுடன், பேனா மன்னன் வால்டேரின் எலும்பு பாந்தியான் மண்டபத்தில் அடக்கஞ்செய்யப்பட்டது. புகழ்மன்றம் நோக்கி வால்டேரின் சவப்பெட்டி எடுத்துச் செல்வதை அட்டைப் படத்தில் காண்க.

தப்பட்டார்கள். அரசகுடும்பத்தைச் சார்ந்தோரும், குறுநில மன்னரும், வேளாண்குடித் தலைவரான வேளிரும் மட்டுமே பெரும்படைத் தலைமைக்குப் பொதுவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

படைகளை அவ்வப்போது மேற்பார்வையிடுவோர்க்குப் படைகாண்பார் என்று பெயர்.

அமைதிக்காலத்தில் மெய்க்காப்பாளர், ஊர்காப்பாளர், பரிவாரப்படையினர், நிலைப்படையினர் ஆகியோர் ஏந்தியிருக்கும் படைக்கலங்களைத் தவிர, ஏனைய படைக்கலங்களெல்லாம் படைக்கலக்கொட்டில் என்னும் ஆயுதச்சாலையில் வைக்கப்பட்டிருக்கும். படைக்கலங்களுக்கு ஓயாமல் எண்ணெய் தடவி, மாலைசூட்டி, மயிற்பீலிகட்டி அழகுபடுத்திவைப்பர். அரசனுடைய படைக்கலக் கருவிகளைத் தனியே ஒரு கட்டிலில் வைத்துப் பாதுகாப்பர். அந்தக் கட்டிலுக்குப் படைக்கலக் கட்டில் என்றுபெயர்.

ஒவ்வொரு அரசனிடமும் வீரமுரசு என்று ஒன்று உண்டு. போர் மூண்டுவிட்டதென்றால் அந்த முரசு முழங்கும். அந்த முரசு அரசனை வணங்கிப் போற்றும் அளவுக்குத் தனிச்சிறப்பு வாய்ந்தது. போர்க்காலங்களில் போர்வீரர்கள் வீரமுரசை உயிர்போல் காத்துவருவர். மாற்றார் வீரமுரசைக் கைப்பற்றிவிடுவார்களேயானால் அரசன் தோற்றுவிட்டான் என்று பொருள். அமைதிக்காலத்தில் வீரமுரசு அதற்கென அமைக்கப்பட்டிருக்கும் தனிக்கட்டிலில் வைக்கப்பட்டிருக்கும். கட்டிலில் பஞ்சுமெத்தை விரித்து, அதில் எவ்வளவு அழகாக அந்த முரசை வைக்கமுடியுமோ அவ்வளவு அழகாக வைப்பர். மாலையையும், பீலியையும் அந்த முரசுக்குச் சூட்டி மகிழ்வர். புலியைக் கொன்ற எருதினது தோலைக்கொண்டாவது, அல்லது வேறோர் எருதினைக் கொன்று வீழ்த்திய எருதினது தோலைக்கொண்டாவது வீரமுரசினை உருவாக்குவார்கள்.

பண்டைத் தமிழர்களிடத்தே படைவீரமும், போர்த்திறனும் மிகச்சிறந்த வகையில் அமைந்திருந்த காரணத்தால்தான், பண்டைத் தமிழகம், யாருக்கும் தலைதாழ்த்தாமல், வெற்றிக்களிப்போடு நிமிர்ந்து நின்றது என்னலாம்!

[இது பேராசிரியர் ஞா. தேவநேயப்பாவாணர் எழுதிய 'படை' என்னும் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு தழுவி எழுதப்பட்டதாகும்.]

பனிவெளியில்

[இரா. செழியன்]

தங்கம் காரை நிறுத்திவிட்டு இறங்கி வந்தாள். கீழே விழுந்துகிடந்தது ஒரு பெண். அவள் கையிலிருந்த பச்சிளங்குழந்தை வீரிட்டு அழுதது. இருவருக்கும் காயமெதுவும் படவில்லை. விழுந்த அதிர்ச்சியில் பெண் உடல் நடுங்கிக்கொண்டிருந்தது.

"ஏம் பிள்ளே! இப்படிக் கண்மண் பார்க்காமல் நடுரோட்டில் நடந்துவந்தியே! அந்த அம்மா காரை நிறுத்தாம இருந்தா. நீயும், உன் குழந்தையும் என்னகதியாயிருக்கும்?" என்று கூட்டத்திலிருந்த பெரியவர் கோபத்துடன் கேட்டார்.

ஏதாவது உயிருக்கு ஆபத்தோ என்று பதறிப்போயிருந்த தங்கத்துக்குக் கொஞ்சம் நிதானம் வந்தது. பாதையோரத்தில் நடப்பதற்கென்று, வழி ஒதுக்கியிருக்கும்பொழுது தாறுமாறாக இவர்கள் ஏன் குறுக்கே நடந்து வருகிறார்கள் என்று அவளுக்குக் கோபம் வந்தது.

"ஏனம்மா! பாதையைப் பார்த்து வரக் கூடாதா? கொஞ்சம் தவறியிருந்தால்...." மேற்கொண்டு சொல்லமுடியாமல், தங்கம் திரும்பினாள்.

குழந்தையைத் தாங்கிக்கொண்டு, தளர்ந்து நின்றுகொண்டிருந்த அந்தப் பெண் தங்கத்தின் குரல் கேட்டு, தூக்கத்திலிருந்து விழிப்பவள்போல் "நீங்களா, டாக்டர்?" என்று ஆச்சரியத்துடன் கூவினாள்.

அந்தப் பெண்—முதலில் மயக்கம்போட்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டது—பின் டாக்டர் சஞ்சீவியும் தங்கமும் பார்க்கப்போனது—குழந்தையை விட்டுப்போவதாக முதலில் சொன்னவள் பின் எண்ணத்தை மாற்றிக்கொண்டது—அவளேதான் — தங்கத்திற்கு அவளைப்பற்றி ஞாபகம் வந்தது.

"உன் பெயர் சகுந்தலாதானே!" என்று தங்கம் கேட்டாள்.

"ஆமாம் அம்மா."

இதற்குள் பின்னாலிருந்த கார்கள், சத்தம் போட ஆரம்பித்தன. குழந்தையும் வீரிட்டு அழ ஆரம்பித்தது.

"சரி, காரில் ஏறிக்கொள்! குழந்தைக்கு ஏதாவது காயம்பட்டிருந்தால், பார்த்துவிட்டு அனுப்புகிறேன்."

தாயையும், குழந்தையையும் காரின் பின்புறம் அமர்த்தி, தங்கம் மறுபடியும் காரை ஓட்டிச் சென்றாள். மாலையில் இருந்த குதூகலம் எங்கோ மறைந்துவிட்டது. காரை நிறுத்தியபோது உண்டான சிறு நடுக்கம் அவளை விட்டு நீங்கவில்லை.

* * *

சென்னைப் பழனியாண்டவர் பக்தஜன சபையில், நவராத்திரிப் பிரசங்கங்கள் சீரும் சிறப்புடனும் நடைபெற்றுக்கொண்டிருந்தன. பக்தர்கள் கோஷ்டி நாள்தோறும் அங்கு வந்து கூடிற்று. அந்த விழாக்களில் கலந்துகொண்டு கௌரவிக்காத ஜட்ஜுகள், அட்வகேட்டுகள், மந்திரிகள், மாஜி மந்திரிகள் யாரும் இருக்க முடியாதென்றே சொல்லலாம். தினம் முதலில் ஒரு பாட்டுக்கச்சேரி, அப்புறம் கதாகாலட்சேபம், அல்லது ஒரு சத்விஷயம்பற்றி ஒரு உபந்

ரியாசம் இருக்கும். அங்கு பரமாத்மாவைப் பற்றியும், பாவபுண்ணியங்களை நீக்கி ஜீவன் முக்தியடையும் விதத்தைப்பற்றியும், பாரத பூமியின் மேன்மை பற்றியும், பக்திமார்க்கத்தின் உயர்வு பற்றியும் பேசப்பட்டன. பக்தி ரசம் ததும்பி வழிந்தபடியே இருந்தது. அங்கு கூடியவர்கள் கேவலம் இகத்தைப்பற்றியல்ல, நித்திய உலகான பரத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தார்கள். உண்மையில் அவர்களில் யாரும் இகத்தைப்பற்றிக் கவலைப் படவேண்டிய அவசியத்திலில்லாதவர்கள். பக்த ஜனசபையின் வெளியில் மெருகு குலையாத மோட்டார் வண்டிகள் காத்துக்கொண்டிருந்தன. பக்தி மார்க்கத்தைப்பற்றியும், பழங்காலப் பெருமையையும் பேசியபின், "பாண்டியாக்" காரில், ஏறிப் போய்க்கொண்டிருப்பார்கள் தங்கள் ஆடம்பர மாளிகையைநோக்கி. பக்த ஜன சபை ஊர்ப் 'பெரியமனிதர்'களுக்குப் பொழுது போக்கு இடமாக இருந்தது. ஆதலால் மிக உயர்ந்த, எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்ட விஷயங்கள் அங்கு விவாதிக்கப்பட்டன.

பக்தஜனசபையின் நவராத்திரிப் பிரசங்கங்களின் கடைசிநாள் வைபவத்துக்கு வருமாறு, கமலநாதனுக்கு அழைப்பு வந்தது. அன்று ஜஸ்டிஸ் வெங்கடாச்சாரி தலைமைவகிப்பதாகவும், அட்வகேட் அனந்தராம ஐயர், ஆச்சாபுரம் பிச்சுமணி சாஸ்திரிகள், பத்திரிகை ஆசிரியர் கோபால அய்யங்கார், சைவச் சீலர் சதானந்தம் பிள்ளை, இவர்கள் பேசுவதாகவும், கடைசியாக யோகி நித்யானந்தர் "ஓங்காரப் பெருமை" பற்றி உபந்நியாசிப்பார் என்றும், அவருக்கு மராமத்து இலாகா மந்திரி மன்னார்சாமி அவர்கள் பொன்னாடை போர்த்துவார் என்றும் நிகழ்ச்சிநிரலில் காணப்பட்டிருந்தது. கமலநாதனுடன் நெருங்கிப் பழகும் பலர் அங்கு வருவதால், பொழுதுபோக்காக அவனும் சென்றான். மேலும் ஜட்ஜ் வெங்கடாச்சாரியார் போன்ற சட்ட நிபுணர்கள், அங்கு சமய நுணுக்கம்பற்றி என்ன பேசப்போகிறார்கள் என்று கேட்க ஒரு ஆவலும் இருந்தது.

பக்தஜனசபைக் கடைசி நாள் கூட்டத்துக்குத் தலைமைவகித்த ஜஸ்டிஸ் வெங்கடாச்சாரி மிகத் தீவிரமாக, அழுத்தந் திருத்தமாகப் பேசினார். "எந்தக் காரியத்தைச் செய்யவேண்டுமானாலும். மத நம்பிக்கை வேண்டும். மத நம்பிக்கை இல்லாமல் ஒரு காரியமும் நடைபெறாது. இதையெல்லாம் உத்தேசித்துதா நமது பாரத தேசத்துப் பெரியவர்கள் ஆசா அனுஷ்டானங்களை உண்டாக்கிவைத்தார்க இந்து மதம் அத்தகைய ஆசார அனுஷ்டான களைப் பாதுகாத்து வருகிறது. பாரத தேச துப் பெருமை இந்து மதத்தின் பெருமையி இருக்கிறது, அதன் ஆசார அனுஷ்டானத்தி இருக்கிறது. இதற்காக மற்ற மதத்தைச் சே தவர்களை இந்து மதத்திற்கு மாற்றுகிறே என்று நினைக்கவேண்டாம் (சிரிப்பு) எ மதத்தில் பிறந்து வளருகிறார்களோ அந்த மத தில் இருப்பதுதான் உத்தமம். பக்தி இருந்தா போதும், ஆசாரங்களைப் பாதுகாத்தா போதும்.

பழைய காலத்தில் இருந்த பக்திக்கு, ஆக் பலத்துக்கு இந்தக்காலத்து விஞ்ஞானம் ஈ செய்யாது. அந்தக்காலத்தில் ராம நாமத்தை பூஜித்துக்கொண்டே அனுமான் கடலைத் தா னார் மலையைப் புரட்டினார். இந்தக்காலத்தி அணுக்குண்டு பெயரைச் சொன்னால் அர்த்த வருகிறது. (கரகோஷம்).

எல்லோரும் மதபக்தியுடன் இருங்கள் சாஸ்திர சம்பிரதாயங்களை மறந்துவிட தீர்கள்."

ஜஸ்டிஸ் வெங்கடாச்சாரி முடித்ததும் எ லோரும் கைதட்டிச் சிறப்பு செய்தார்கள். அ ருடைய பேச்சைக் கேட்டதும், கமலநாதனு குச் சில இடங்களில் சிரிப்பு வந்தது. ஜஸ்டி வெங்கடாச்சாரி, இவ்வளவு பண்டை பெருமை, பாரதப்பண்பாடு என்று இப்பொ ழுது பேசுகிறாரேயொழிய, அவர் படிக்க சென்றது, லண்டனுக்கு. பாரிஸ்டர் பட்ட பெற்றுத் திரும்பினார். கிரிமினல் வக்கீலாக பிரபல்யம் அடைந்தார். பின்பு அவருடை மாமனார் தயவினால் பதவி உயர்ந்தது. செ வாக்கு வளர்ந்தது. ஜட்ஜ் பதவியில் அமர்ந் தும், சனாதன தர்மத்தைப் பற்றிப் பேச ஆரம் பித்துவிட்டார். முதலில் அவருக்குச் சாஸ்தி சம்பிரதாயங்களைப்பற்றி அசையாத நம்பிக்கை யிருந்திருந்தால், உச்சிக்குடுமியை விட்டு கிராப் வைத்திருக்கவேண்டியதில்லை. பஞ்சகச்சத்தை விட்டுக் கோட், சூட் போட்டிருக்கக்கூடாது. தெய்வ பாஷையை விட்டு, நீசபாஷையைக் கற்றிருக்கக்கூடாது. ஆனால் எல்லாவற்றையும் செய்து அந்தஸ்தில் உயர்ந்த பிறகு, இப்பொழுது இதோபதேசம் செய்யக் கிளம்பிவிட்

டார், ஆனால் இப்பொழுதுகூட, இவர் "ராம நாமத்தைப் பஜித்துக்கொண்டு அனுமான் கடலைக் கடந்தான்" என்று பேசுகிறாரே யொழிய, தனது இரண்டாவது பையனை, ஆகாயவிமான என்ஜினியராக்க அமெரிக்கா அனுப்பியிருக்கிறார். பக்த ஜனசபை—பக்த கோடிகளுக்காகப், பத்திரிக்கை நிருபர்களுக்கு அவர் அப்படிப் பேசினார்.

மற்றும் நடைபெற்ற சொற்பொழிவுகளைக் கமலநாதன் மிகப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்தான். சிலர் பேசும்பொழுது சுற்றிலுமிருந்தவர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்தார்கள்.

கடைசியாகப் பிரசங்கமாரி, என்று போற்றப் படும் யோகி நித்யானந்த சாமிகள் பேசினார்: "பெரியோர்களே! ஆஸ்திக சிரேஷ்டர்களே! மெய்யன்பர்களே! ஆலவாயப்பன் திருவருளால் இன்று தென்பரதகண்டம் முழுவதும், ஆஸ்திக வளர்ச்சியும், பக்திமார்க்கமும் மீண்டும் தழைத் தோங்கிவருகின்றன. இந்தத் திருத்தொண் டில், கனம் மந்திரிமார்கள், ஆதீனங்கள் ஆசார்ய சிரேஷ்டர்கள், வேதாந்த, சித்தாந்த சிரோன்மணிகள், ஊர்ப் பெரியமனிதர்கள் எல்லோரும் ஒருமைப்பாடாக இறங்கியிருப்பது இறைவனின் திருவருள் என்றே கூறவேண்டும். இராமபிரான் கடல்கடக்க, அவரது வானரச் சேனை பாலங்கட்டத் தொடங்கியதாம். அதற்கு அனுமான், ஜாம்பவன் போன்ற வானர வீரர் கள் மலையைப் பெயர்த்துவந்து போட்டார் களாம், இவ்வாறு மலையைப் பெயர்த்து, பாறை யைப் புரட்டிப்போடும் வேலையைப் பார்த்த ஒரு சிறு அணில் தானும் ஏதாவது உதவி செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன் மண லில் புரண்டுவந்து, நீரில் புரண்டதாம். அதைப் போல பெரிய ஜாம்பவான்கள் செய்யும் திருத் தொண்டில், அணில் போன்ற மிகச்சிறியேனா கிய யான் என்னுடைய சிறு அளவில் ஈடுபட் டிருக்கிறேன். (கரகோஷம்) கல்வி கேள்வி ஞானத்தில் மிகச்சிறந்தவர்கள் கூடியிருக்கும் இத்திருக்கூட்டத்தில், அடியேன் பேசுவதில் குற்றமானவற்றை நீக்கி, ஏதேனுஞ் சில பொருத்தமானவை இருந்தால் ஏற்றுக்கொளல் வேண்டும் என இறைஞ்சுகிறேன்."

இவ்வாறு அவையடக்கத்துடன், மிகுந்த ஆடம்பரத்துடன் நித்யானந்த சாமிகள் தனது பிரசங்கமாரியை ஆரம்பித்தார். காலம் கெட்டுப்போயிருப்பதையும், பக்திமார்க்கம் பாழடைந்து கிடப்பதையும், பாபாத்மாக்கள் பெருகி, ஆசார அனுஷ்டானங்கள் நசித்து வருவதையும் பற்றி விரிவாக யோகியார் எடுத் துரைத்தார். நாட்டில் இவ்வளவு நலிவுகளைப் பற்றிப் பேசியதும், அவர் மனமுடைந்துபோக வில்லை. பக்திமார்க்கம் வேத ஆகமங்கள், சைவத் தருமங்கள் மங்கியிருக்கின்றனவே தவிர, அழிந்துபோகாது, அழிந்துவிடாது என்று ஆத்திரத்துடன் பேசினார்.

"முழுமுதற் கடவுள் எம்பெருமான். அவ ருடைய மதத்தை இப்புல்லர்கள் அழிப்பரோ? அழிக்கவும் சாலுமோ? இல்லை, இல்லை! எண் ணாயிரம் சமணர்கள் ஒன்றுகூடி எம் திருஞான சம்பந்தரை, அவரது திவ்வியப் பாடல்களை அழித்துவிட முயன்றனர்? முடிந்ததோ! மிக உருக்கமான திருப்புகழ் பாடல்களைப் பாடிய அருணகிரியாரை சம்பந்தாண்டன் ஒழிக்க நினைத்தான்? முடிந்ததோ! அதுபோல யார் எதிர்த்தாலும், நமது வேதம், மதம், மறை கள், ஆசாரங்கள் அழிந்துபோகாது!" என்று ஆவேசத்துடன் கனல் கக்கினார், அச்சைவச் சீலர். இடையிடையே கூடியிருக்கும் பெரிய வர்களில் ஒரிருவருக்குப் புகழ்மாலை, திருப்புக ழிலிருந்து ஒரு பாட்டு, தேவாரத்திலிருந்து ஒரு அடி, திருவிளையாடல் புராணத்திலிருந்து ஒரு சம்பவம் இப்படி யோகியார் பிரசங்கத் தைத் தொடர்ந்து நடத்திக்கொண்டிருந்தார், பால், பழம், கற்கண்டு இவைகளுடன்.

பேசிக்கொண்டிருந்த யோகியார் திடீரென்று சித்தாந்தத்தைப்பற்றி விளக்கம்கூற ஆரம்பித்து விட்டார்.

"சீவராசிகளுக்கு நால்வகைத் தோற்றம், எழுவகைப் பிறவி, எண்பத்துநான்கு நூறாயிர யோனி பேதங்களில் பட்டு எண்ணிலாத வித மாய், பண்டை வினைப்பயனாய் ஒவ்வொரு சரீரத்தில் ஒவ்வோர் ஆன்மா பொருந்தி, வினைப் போகங்களை நுகரவும், ஆகாமிய வினைகளை ஈட்டவும், பக்குவா பக்குவங்களை அடையவும், போக மோட்சங்களை அடையவும் செய்கின் றன. ஆன்மாவானது அருவம், அருவுருவம், உருவமாகிய இயல்புகளும், தோற்ற ஒடுக்கங் களாகிய காரியப்பாடுகளுமின்றி, சத்தியல் புடைய சித்துப்பொருளாய், அநாதியுள்ளதாய், முத்தியிலே நித்தியானந்தத்தை அடைவது."

நித்தியானந்த சுவாமிகள் என்ன பேசுகிறார் என்று அங்கு கூடியிருந்த பலருக்குப் புரியவில்லை. வேதாந்த விஷயங்கள் எவ்வளவுக் கெவ்வளவு புரியாமல் இருக்கிறதோ, அந்த அளவு உயர்ந்ததாகக் கருதப்படும். ஆகையால் நித்தியானந்த சாமிகள் மிக உயர்ந்த சித்தாந்த சிக்கலை அவிழ்த்துக்கொண்டிருக்கிறார் என்று கூட்டத்தில் இருக்கும் பெரியமனிதர்கள் பார்த்தபடி இருந்தனர். தான் பேசுவது கூடியிருப்பவர்களுக்குப் புரியவில்லையென்றதும், பேசுபவருக்கு உற்சாகம் அதிகமாகியது. மேற்கொண்டு சித்தாந்த சொற்களைத் தங்குதடையின்றி வாரியிறைத்தபடி இருந்தார்.

கடைசியில் நித்தியானந்த சுவாமிகள் தத்துவார்த்தங்கள் சொல்லப் புறப்பட்டார். "நீலமயிலேறி வருமீசன்...." என்ற அடியை விளக்கஞ்செய்தார். "ஒரு மயில்மீது ஒருவன் அமர்ந்துவர முடியுமா? என்று இக்காலத்துச் சிலர் கேட்கக்கூடும். என்னே அவர்தம் அறிவின்மை! மயில் என்பது பறவை என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. நீலமயில் என்பது பிரணவ சொரூபம். ஈசன் பிரணவ மந்திரத்திற்குமேலிருப்பவர். நீலமயிலேறிவரும் ஈசன் என்றால், பிரணவத்தை எழுந்தருளியிருக்கும் பீடமாகக் கொண்டவர்...."

நேரம் அதிகமானது. சிலர் கைக்கடியாரங்களைப் பார்ப்பதும், சிலரின் கண்கள் சோர்ந்து விடுவதும், நித்தியானந்த சுவாமிகளுக்குத் தெரியாமலில்லை. "எல்லாம் மாயை" யென்று பேசியபோதிலும், இப்பொழுது எதிரே உட்கார்ந்திருக்கும் கூட்டத்தின் பொறுமையற்ற நிலையை, மாயை என்று அவரால் ஒதுக்கித் தள்ளிவிடமுடியவில்லை. தேவாரத்திலிருந்து ஒரு பாட்டைப் பாடித் தமது அரிய பிரசங்கத்தை சாமிகள் முடித்துக்கொண்டார். அந்த முடிவுக்கு மிக ஆவலுடன் காத்திருந்தவர்களும் கைதட்டி, தமது ஆமோதிப்பைக் காட்டினார்கள். மந்திரி மன்னார்சாமி வேறொரு இடத்துக்குப்போகவேண்டி, சென்றுவிட்டதால், தலைவர் ஜட்ஜ் வெங்கடாச்சாரி அவர்களே நித்தியானந்த சாமிகளைப் பாராட்டி, ஜரிகைத் துப்பட்டாவை அவருக்கு அளித்தார். சங்கக் காரியதரிசி நன்றிகூற கூட்டம் கலைந்தது.

கூட்டத்திற்கு வரும்பொழுது கூப்பிட்டவர்களைத் திருப்திப்படுத்தவே கமலநாதன் வந்தான். ஆனால் கூட்டத்தில், பல பெரியமனிதர்கள், சட்ட நிபுணர்கள், இவர்கள் மிக அக்கறையுடன் கலந்துகொள்வதைப் பார்க்கும்பொழுது, பேசப்பட்ட விஷயங்களைப்பற்றியும் அவனுக்கு கவனம் வந்தது. ஜட்ஜ் வெங்கடாச்சாரி பேசியது, சில மாற்றமுடியாத தீர்ப்புகள் போல அவனுக்குப்பட்டது. ஆனால் மற்றெல்லோரையும்விட, நித்தியானந்த சாமிகள் பேசியது அவனுக்குப் பிடித்திருந்தது.

"எங்கே போயிருந்தீர்கள் இவ்வளவு நேரமாக?" என்று தங்கம் கேட்டாள்.

"பக்த ஜன சபைக்கு!"

"பஜனை பாட ஆரம்பித்துவிட்டீர்களா?"

"அப்படிச் சொல்லாதே, அங்கு ஜட்ஜ் வெங்கடாச்சாரிதான் தலைமைவகித்தார். பேச்சு நன்றாக இருந்தது."

கீழிருந்து குழந்தை அழுகுரல் வந்தது.

"ஏது குழந்தை?" என்று கமலநாதன் மாடிப் படிக்கட்டில் அடிவைத்துக் கீழே பார்த்தான். முன் ஹாலுக்குப் பக்கத்தில் இருக்கும் அறையிலிருந்து சத்தம் வந்தது.

"இன்றைக்கு என் காருக்குமுன் தாயும் குழந்தையும் விழுந்துவிட்டார்கள்!"

"ஏதாவது பலத்த காயமா? ஜாக்கிரதையாக ஓட்டவேண்டும்!"

"அதற்குள் அவசரப்படாதீர்கள். ஜாக்கிரதையாக ஓட்டியிராவிட்டால், அவர்கள் இப்பொழுது பிழைத்திருக்கமாட்டார்கள். கால் தடுக்கி விழுந்துவிட்டாள். நான் உடனே நிறுத்திவிட்டேன்."

"பின் இங்கு ஏன் வந்தார்கள்."

"என் ஆஸ்பத்திரியில்தான் இவள் பிரசவத்தின்போது இருந்தாள். வெளியூர்போலிருக்கிறது. இரவு தங்கியிருக்கச் சொன்னேன். காலையில் அவள் போய்விடுவாள்."

(தொடரும்)

கனவுகள்

எல்லோரும் கனவு காண்கின்றனர். சிலர் தாங்கள் கண்ட கனவை நினைவிற்கு கொண்டு வர இயலாத காரணத்தால் தாங்கள் காண்ப தில்லை என்று எண்ணுவர். அறிவியற் கருத்துக்கள் பரவி நிற்கும் இக்காலத்தில் கனவுகள் பற்றிக் கலக்கம் கொள்ளவில்லை என்றாலும் இன்னும் பலர் தெளிவற்ற கருத்தையே கொண்டிருக்கின்றனர். பலரிடமிருந்து கனவைப் பற்றிய மூடக்கொள்கைகள் அகன்ற பாடில்லை. அண்மையில் மதுரையில் ஒரு அன்பர் தம் கனவில் மீனாட்சியம்மை தோன்றி வைர நகை வேண்டுமென்று கேட்டாளாம்; அன்பர் அலறித்துடித்து மறுநாளே வைர நகைகளை கோவில் அதிகாரிகளிடம் சேர்த்தாராம். இருபதாம் நூற்றாண்டிலேயே இந்நிலை யென்றால், இயற்கையின் தன்மைகளைக் கண்டு அஞ்சி நடுங்கிய அன்றைய நாட்களில் மூடக் கொள்கைகள் மிகுந்து காணப்பட்டதை எண்ணி வியப்பதற்கில்லை.

ஆரம்பகாலத்தில் மனிதன் நெருப்பைக் கண்டான்—வியந்தான். ஆனால் அதன் ஆற்றலைக் கண்டு பயந்தான். அந்த பயத்தின் அடிப்படையிலே எழுந்த மூடக்கொள்கையின் காரணமாக நெருப்பை ஒரு தேவனாக்கி, தனது வழிபாடுகளையும், காணிக்கையையும் செலுத்தினான். மின்னலைக் கண்டான்; பேரிடியைக் கேட்டான்; அடை மழையைக் கண்டான்; கோரப் புயலைக் கண்டான்; கடும் வெள்ளத்தால் ஏற்படும் அழிவைக் கண்டான். இயற்கையின் தன்மைகளை உய்த்துணர முடியாத அவனுடைய உள்ளத்தில் பயம் குடிகொண்டது. ஒவ்வொன்றிற்கும் ஒரு தேவனை ஏற்படுத்தி வழிபாடுகள் உரைத்து, காணிக்கைகள் செலுத்தி தன்னைக் கொடுமைகளினின்றும் துன்பங்களினின்றும் காப்பாற்ற வேண்டினான்.

இவ்வித சூழ்நிலையில் அவன் கனவுகள் காண ஆரம்பித்தான். அவை ஏன் நிகழுகின்றன? எப்படி நிகழுகின்றன? என்று அறியத்திறனில்லாத அவன் பல மூடக்கொள்கைகளைப் பரவவிட்டான். கனவுகள் கடவுளால் மனிதனுக்கு தூக்கநேரத்தில் அனுப்பப்படும் செய்திகள் என்று எண்ணினான். கனவில் காண்பவை அப்படியே நிகழக்கூடியவை என்று நம்பினான். பண்டைய கிரேக்கர், உரோமர், எகிப்தியர் ஆகியோர் தனியே ஒரு கனவுத் தேவனையே கொண்டிருந்தனர். எல்லா இனத்தாரிடையேயும் கனவைப் பற்றிப் பலப்பல மூடக்கொள்கைகள் மிகுந்து காணப்பட்டன. பல்லிபலன் காண்பதுபோல்,கனவுப்பலன் காண்பது முக்கியமாகக் கருதப்பட்டது. கனவுகளை, நன்மை விளைவிப்பவை, தீமை விளைவிப்பவை என்று பிரித்தனர். இவையிவை காணக்கூடிய கனவுகளென்றும், இவையிவை காணக்கூடா கனவுகளென்றும் வகுத்தனர். கனவுகள் செல்வத்தையும், சுகத்தையும், வறுமையையும், நோயையும் தாவல்லது என்று எண்ணி, நன்மைதரும் கனவுகளையேக் காண கனவுத்தேவனை வேண்டினர்.

மூடக்கொள்கைகள் என்ற படிக்கட்டுகளில் ஏறி மதம் என்ற மண்டபத்தில் நுழைந்து பல காலம்வரை வாழ்ந்தனர். அறியாமை இருளிலிருந்து அறிவு வொளியைக் காண அவர்கள் வெளிவரவில்லை. சிந்திக்க மறுத்தனர்; சிந்திப்பவனையும் வெறுத்தனர். என்றாலும் மதம் அறிவியலோடு போரிட்டு வெற்றிபெற முடியவில்லை. அறிவியல் அறிஞர்கள், இயற்கையின் தன்மைகளை ஆராய்ந்து பல உண்மைகளை வெளியிட்டனர். கனவுகள் பற்றியும் உளநூல் அறிஞர்கள் ஆராய்ந்து முடிவுகளைக் கண்டிருக்கின்றனர். கனவுகளைப்பற்றி எழுந்த ஒவ்வொரு ஐயங்களுக்கும் விளக்கம் தந்துள்ளனர். அவைகளில் சிலவற்றைக் கீழே காணலாம்.

கனவுகள் எங்கிருந்து வருகின்றன?

மனிதனது மனம் விழிப்புள்ள நிலை விழிப்பற்ற நிலை என்ற இரு நிலைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. விழிப்புள்ள மனம் உடலின் பல்வேறு இயக்கங்களை, கவனித்து வருகிறது.

விழிப்பற்ற மனதில், ஆர்வம், பயம், இடையூறுகள், விருப்பம் ஆகியவைகள் நிரம்பியுள்ளன. விழிப்புள்ள மனம் விழிப்பற்ற மனதை எப்பொழுதும் கவனித்து, குறை கண்டுபிடித்து அதனை இயங்கவொட்டாமல் தடுக்கின்றது. தூக்க நேரத்தில் விழிப்புள்ள மனதின் "குறைகாண்" இயக்கத்தின் திறன் சிறிது குறைக்கப்படுகிறது. இதனால் விழிப்புள்ள, விழிப்பற்ற ஆகிய இரு நிலைகளினிடையேயுள்ள தடுப்புகள் தளர்த்தப்படுகின்றன. விழிப்புள்ள மனம் விழிப்பற்ற மனதில் நடப்பவைகளைச் சிறிது காணமுடிகிறது. இவையே கனவாக நமக்குத் தோன்றுகிறது. விழிப்புற்றிருக்கும்போது விழிப்புள்ள மனதின் "குறைகாண்" இயக்கம் திறன் பெற்றதாகிச் சுற்று இயக்கங்களுக்குச் சரியாக வேலை செய்கிறது. போதை தரும் பொருளை உட்கொள்ளும்போதும், குளோரோபாரம் முதலிய மருந்துகளை முகரும்போதும் "குறைகாண்" இயக்கத்தின் திறன் சிறிது குறைக்கப்படுகிறது. பைத்தியம் பிடித்த நிலையில் 'குறைகாண்' இயக்கம் அறவே மறைந்து விடுகிறது.

கனவு காணும்போது உள்ள பண்பிற்கும் விழிப்புற்றிருக்கும்போது உள்ள பண்பிற்கும் வேறுபாடு இருக்கின்றதா ?

இது கனவு காண்பவரைப் பொறுத்திருக்கிறது. விழித்திருக்கும்போது காணும் ஒருவரையே கனவிலும் கண்டால் அது நல்ல மனவலிவு உள்ளதைக் குறிக்கும். முற்றிலும் வேறுபட்ட ஒருவரைக் கனவில் காணுதல் நரம்புத் தளர்ச்சியைக் குறிக்கும்.

கனவுகளைப் பலவகைகளாகப் பிரிக்கலாமா?

கிரகம் அவே என்பவர் கனவுகள் கீழ்க்காணும் வகைகளுள் அடங்கலாம் என்று கண்டுபிடித்துள்ளார்.

1. விருப்பம் நிறைவேறும் கனவுகள்

குழந்தைகளின் பொம்மைகள் பெறும் கனவுகள். பெரியவர்களின் பொருள் தேடிடும் கனவுகள். வெறுத்தொதுக்கப்பட்டவர் இறந்ததாகக் காணும் கனவுகள்.

2. கவலை நிரம்பிய கனவுகள்

புகைவண்டி ஏறத் தவறிவிடுதல், அடியில்லா பள்ளத்திலிருந்து வெளியேற முயற்சித்தல்— முதலிய கனவுகள், எடுத்த காரியத்தை முடிக்கத் தடைபடுமோ என்ற பயத்தைக் குறிக்கலாம்.

3. கருத்துள்ள கனவுகள்

இக்கனவுகளால் சிக்கல்கள் தீர்க்கப்படலாம் அல்லது மேற்கொள்ளவேண்டிய வழிகள் தோன்றலாம்.

4. தன்குறை கூறும் கனவுகள்

இக்கனவுகள் காண்பவர் செய்யும் தவறுகளை எடுத்துக்காட்டும்.

5. திரும்பக் கூறிடும் கனவுகள்

இக்கனவுகளில், காண்பவரின் அன்றைய அனுபவங்கள் திரும்பத் தோன்றலாம்.

கொடுங்கனவு (Nightmare) என்றால் என்ன ?

இக்கனவுகளை எல்லோரும் காண்பதில்லை. நூற்றுக்குச் சுமார் இருபதுபேர்தான் காண்கின்றனர். அநேகமாக இவை துன்பக்கனவுகளாகவே முடியும். வாய்விட்டு அலறுதல் திடீரென விழித்துப் பீதியடைதல் இவைகள் இதற்கறிகுறிகளாகும். இக்கனவுகள் உடலின் உள் எதிர்ப்புகளை வெளிப்படுத்துகிறதென்றும், அது கடுமையான உளவியல் செயல்களைத் தூண்டுவதால் கனவுவகைகளிலேயே முக்கியமானதென்றும் உளவியல் வல்லுநர் கருதுகின்றனர். இருதய நோயுடையவர்களும், இரத்த—அமுக்க நோயுடையவர்களும் இக்கொடுங்கனவுகளால் பல சமயங்களில் இறந்துவிடுவதும் உண்டு.

கனவுகளின் தனிச்சிறப்பு என்ன ?

விழிப்புற்றிருக்கும்போது ஒருவனது எண்ணங்களும் செயல்களும் அவனது பண்பை வெளிப்படுத்துவதைக் காட்டிலும் தூங்கும்போது கனவுகள் அவனது பண்புகளை அதிகமாகத் தெரிவிக்கின்றன. ஆனால் கனவுகளை அப்படியே எடுத்து ஆராய்தல் தவறு. கனவுகள் வெறும் குறிப்புகளே. அவைகளின் பொருள் கற்பனை உருவகங்களிலே புதைந்து கிடக்கின்றன.

விழிப்புள்ள மனம், விழிப்பற்ற மனதின்மீது எப்பொழுதும் கவனத்துடன் குறைகண்டுகொண்டு இருப்பதால், விழிப்பற்ற மனம் தன்னை மறைத்து அதன் செய்திகளை உருவகக்

காட்சிகளாக மாற்றி, விழிப்புள்ள மனதின் 'குறைகாண்' அமைப்பை ஏமாற்றிக் கனவுகளாகத் தருகின்றது. இந்தக் 'குறைகாண்' கவனிப்பால் விழிப்புள்ள மனம், தெரியாதவைகளைப்பற்றி இயல்பால் அமைந்த, காரணம் அறிய இயலாத பயத்தால் (விழிப்பற்ற மனம்) தாக்கப்படாமல் காக்கப்படுகிறது.

கனவுகள் பற்றிய பலனை அறிய முற்படலாமா ?

உளநூல் வல்லுநர் அப்படிச் செய்யக்கூடாதென்று கூறுகின்றனர். கனவுகள் கற்பனை உருவகங்களாலான சிக்கல் நிறைந்த அமைப்புகள். அதன் கருத்து காண்பவரைப் பொறுத்து வேறுபடுகிறது. கனவுகளின் பலனைச் சரியாக அறியவேண்டுமானுல் முதலில் உளநூல் வல்லுநர் கனவு காண்பவரின் பண்புகளைப்பற்றியும், பின் கனவின் பொருள்களையும், காண்பவரின், எண்ணங்கள், உணர்ச்சிகள், அனுபவங்கள்— இவைகளை ஒப்பிட்டு அறிதல்வேண்டும். இவ்வளவும் செய்தபின் கனவின் உட்பொருள் விளங்கினுலும் அதனுல் அவன் அடைகிற அல்லது அடையப்போகிற நன்மை அல்லது தீமை எதுவுமில்லை. மனித எண்ணத்திற்கு எல்லையே இல்லை. ஒரு நாட்டிற்கு மன்னனுக வேண்டுமென்று எண்ணலாம். செல்வச் சீமானுக உலவவேண்டுமென்று எண்ணலாம். ஆனுல் இந்த எண்ணத்தைக் கூறி, எண்ணியது நடக்கும் என்று கூறினுல், எங்ஙனம் முடியும் ? அதுபோன்றே விழிப்பற்ற மனதில் எழுகின்ற, விருப்பு, வெறுப்புகளடங்கிய கனவுகள் நிகழக்கூடியவையல்ல. ஆகவே நிகழமுடியாத ஒன்றைப்பற்றி கவலைகொள்ளவேண்டிய அவசியமுமில்லை.

உடல்நிலை, ஆகாரம், முதலியன கனவுகள் தோன்றக் காரணமாக இருக்கமுடியுமா ?

இருக்க முடியும். விழுவதுபோன்ற கனவு, உடல் பளுவால் தோய்வு ஏற்படுகின்ற மெத்தையினுல் ஏற்படலாம். விழிப்பற்ற மனம் உடலின் உணர்ச்சிகளை அறிய முற்படும்போது பலவித கற்பனை உருவக கனவுகளை வகுக்கின்றது. உடலுணர்ச்சிகளால் தூண்டப்பெற்ற கனவுகளின் தன்மை விழிப்பற்ற மனதால் இயக்கப்படுகிறது.

அன்னுசி, பனை, வெள்ளரி முதலியவைகள் கனவுகள் காணும் தன்மையைத் தூண்டிவிடும். இருப்பினும் கனவுகள் அதிகமாக உடல் தூண்டுதல் இல்லாமலே ஏற்படுகின்றன.

கனவுகளில் அதிகமானவை சிற்றின்பத்தை உட்பொருள் கொண்டதாக இருக்கும் என்பது உண்மையா ?

உண்மை என்று புரூட் என்பார் கூறுகிறுர். ஆனுல் இதை பலர் மறுக்கின்றனர். கிளேயின் என்பார் விரிந்த ஆராய்ச்சியின் முடிவாக நூற்றுக்குப் பத்து கனவுகள்தான் சிற்றின்பத்தை உட்பொருள் கொண்டதாக இருக்கின்றது என்பதைக் கண்டார். இதனுல், கனவுகளை மற்றவருக்குத் தெரிவிப்பதில் கவலை கொள்ள வேண்டியதில்லை.

கனவுகள் எவ்வளவு நேரம் நீடிக்கின்றன ?

மின்சார அளவுகள் கொண்டு ஆராய்ந்ததில் அதிகமான கனவுகள் 2-லிருந்து 3 நிமிடங்கள் வரை நீடிக்கின்றன. நினைவிற்கு வரும் எல்லாக் கனவுகளும் காலையில் எழுவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்புதான் நிகழ்கின்றன. விழிப்புற்ற பிறகு நினைவிலிருந்து மறைகின்றன.

யார் அதிகமாகக் கனவுகாண்கின்றனர் ?

ஆராய்ச்சி நடத்தியதில் ஆண்களைவிட பெண்களே அதிகமாகக் கனவுகாணும் தன்மை பெற்றிருக்கின்றனர் என்று தெரிகிறது. 20-லிருந்து 30 வயதுள்ளவர்கள் அதிகமாகக் காண்கிறுர்கள். வயதானவர்கள்காணும் கனவுகள் குறைவுதான்.

குழந்தைகளின் கனவு எப்படிப்பட்டது ?

குழந்தைகளுக்கு விருப்பங்களை மனதில் மறைத்துவைக்கவேண்டிய அவசியமில்லையாதலால் அவர்களது கனவுகள் எளியதாகவும் வெளிப்படையாகவுமே காணப்படும். வாலிப வயதில் உணர்ச்சிகள் அடக்கும் தன்மை வளர்வதால் அவர்களது கனவு கற்பனை உருவங்களோடு தோன்றும்.

கண் இழந்தவர்கள் அவர்களது கனவில் காணமுடியுமா ?

பிறவிக் குருடர்களைத் தவிர மற்றவர்கள் கனவில் காணும் தன்மை பெறுகின்றனர். பிறவிக் குருடர் காணும் கனவுகள் பெரும்

கதிரவனைச் சுற்றிச் சுழலும் கோள்களில் (கிரகங்களில்) வெள்ளி ஒன்று. அந்தக் கோளில் தண்ணீரே இருக்கமுடியாது, அப்படியே இருந்தாலும், அது மிகமிகக் குறைவாகத்தான் இருக்கமுடியும் என்று இதுவரையில் வானநூல் அறிஞர்கள் பலர் கூறிவந்தனர். ஆனால், இப்பொழுது, 'அந்தக் கோள் முழுவதும் தண்ணீர்ப் பரப்பாலேயே மூடப்பட்டிருக்கிறது' என்ற கருத்து வெளியிடப்படுகிறது.

அமெரிக்கா ஹார்வர்டு பல்கலைக்கழகத்தைச் சார்ந்த டொனல்டு ஹெச். மென்ஜில்(Donald H. Menzel) என்பவரும், ப்ஃரெட் எல். விப்பில் (Fred L. Whipple) என்பவரும் சேர்ந்து இந்தப் புதியக் கருத்தை, அமெரிக்க வானநூல் கழகத்தில் (American Astronomical Society) அண்மையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் வெளியிட்டனர்.

வெள்ளியைச் சுற்றி அழுத்தமான முகிற் படலங்கள் சூழ்ந்திருக்கின்றன என்ற உண்மையைச் சிலகாலத்திற்கு முன்பு, காலஞ்சென்ற பிரெஞ்சு வானநூல் வல்லுநர் பெர்னார்டு லியாட் (Bernard Layot) என்பவர் நிலைநாட்டினார். அதன் அடிப்படையில் நின்று ஆராய்ச்சி நடத்திய ஹார்வர்டு வானநூல் அறிஞர்கள், அந்த முகிற் கூட்டங்கள் நீராவியின் கூட்டங்களாகத்தாம் இருக்கமுடியும் என்றும், அவற்றினை அடுத்து வெள்ளியைச் சுற்றி நீர்ப்பரப்பு கட்டாயம் இருக்கவேண்டும் என்றும் காரண காரியவிளக்கங் காட்டிக் கூ[illegible]கிறார்கள்.

அவர்கள் கருத்துப்படி வெள்ளியைச் சுற்[illegible] நின்று நிலவும் முகிற் கூட்டங்கள் நீராவிப் ப[illegible]லங்கள்தாம் என்னும்போது, அவற்றின் கீ[illegible] நீர்ப்பரப்பு இருக்கவே செய்யும். அதுவு[illegible] வெள்ளி முழுவதும் பரவியதாக இருக்[illegible] வேண்டும். நிலப்பகுதியோ அல்லது மலை[illegible]பகுதியோ எங்கேனும் நீட்டிக்கொண்டிரு[illegible]கிறது என்றால், அவை கரிக்காற்றை உறிஞ்[illegible]யிருக்கும். வெள்ளியைச் சுற்றிக் கரிக்காற்[illegible] ஏராளமாக இருக்கிறது என்பது ஐயமற[illegible] தெளிவாவதால், நிலப்பகுதியோ அல்லது[illegible] மலைப்பகுதியோ வெள்ளியில் வெளியே நீட்டி[illegible] கொண்டிருக்கவில்லை என்பதை அறியலாம்[illegible] வெள்ளியில் உயிர்வாழ்வன எதுவும் இல்லை[illegible] என்று இதுவரையில் நிலவிவந்த கருத்து[illegible] மாறி, நீர்வாழும் உயிர்கள் சில இருக்கக்கூடும்[illegible] என்று ஊகிக்கப்படுகிறது.

'மன்றம்' சந்தா விபரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7—8—0
ஆறு திங்கள் ,,	3—0—0	
தனி இதழ் ,,	0—4—0	0—5—0

பாலும் தொடும் உணர்ச்சியைக் கொண்டதாகவே விளங்கும்.

அறிவியல் எப்பொழுதாவது மற்றொருவருடைய கனவை அப்படியே அறிய முற்பட்டதுண்டா?

மாக்ஸ் என்னும் அறிஞர் கைகளினால் பேசும் செவிட்டு ஊமையர்களின் கனவைப்பற்றி ஆராய்ந்தார். கனவு காணும்போது அவர்களது விரல் அசைவுகள் மூலம் அதன் சைகை மொழியால் அவர்களது கனவை அறிய முடிந்தது.

கனவுகள் வருங்கால நிகழ்ச்சிகளை முன்கூட்டியே கூறுமா?

கனவுகள் முன்கூட்டியே வருங்கால நிகழ்ச்சிகளைக் கூறவல்லது என்று பன்னெடுங் காலமாகவே மக்கள் நம்பிவந்தனர். அறிவியல் துணைகொண்டு இயற்கைத் தன்மையை ஆராயும் உள நூல் வல்லுநர் இதை மறுக்கின்றனர். ஒரு ஆயிரம் பேர் காணும் கனவுகளில் ஓரிருவர் பின் நிகழ்ச்சியை முன்கூட்டி அறிவதில் வியப்பதற்கில்லை நாம் எண்ணுகிறபடியே ஓரிரு சமயங்களில் நடைபெறுகின்றது. ஆகவே நாம் எண்ணுவதெல்லாம் நடக்கும் என்று எண்ணுவது அறிவுடைமை ஆகாது.

அண்டசராசரம்-8

[இரா. செழியன்]

[இந்து மதத்தின் வேத, புராணங்களின்படி, அண்டசராசரங்களையெல்லாம் பிரமதேவன் படைத்தான். இவ்வளவு பெரிய பிரமாண்ட படைப்புக்கு ஆதாரமாக—அஸ்திவாரமாக ஒரு ஆமை வைக்கப்பட்டது. ஆமை முதுகின்மேல் அஷ்டதிக்கு யானைகளும், ஆயிரந்தலை ஆதிசேடனும் இருக்கின்றன. அவைகளுக்குமேல் ருத்ரர்கள் வசிக்கும் ருத்ரபுவனம் இருக்கிறது. ருத்ரபுவனத்துக்குமேல் புகைமண்டலம். புகைமண்டலத்துக்குமேல் வெட்டவெளி. அவற்றுக்குமேல் யமபட்டணங்களும், அதையடுத்து 28 கோடிநரகங்களும் நிற்கின்றன. நரகலோகத்தின்மேல் கூஷ்மாண்டபுவனம் அதற்குமேல் ஏழு பாதாளங்கள், அதையடுத்து ஆடகேசுரபுவனம், அதையும் கடந்தால் பூலோகம். பூலோகத்திற்கு உயரே புவலோகம் ஆரம்பிக்கிறது. புவலோகத்தில் மேகமண்டலங்களும். வீரசுவர்க்கமும், காந்தருவர் வித்தியாதரர்களும். கருடன், ஐராவதம் போன்றவைகளும் உள்ளன. புவலோகத்துக்கு மேல் சூரியலோகம். சூரியலோகத்துக்கு அப்பால் சந்திரலோகம். சந்திரலோகத்துக்கு மேல்நோக்கி. அடுத்தடுத்து முறையே, நட்சத்திரமண்டலம், செவ்வாய் மண்டலம், புதன் மண்டலம், பிரகஸ்பதி மண்டலம், சுக்கிரமண்டலம், சனிமண்டலம் முதலியன இருக்கின்றன. சனிமண்டலத்தில், சனிபகவானைத் தவிர, இராகு கேதுக்கள் இருக்கின்றன. அதற்கு மேலுள்ள சப்தரிஷி மண்டலத்தில், அத்திரி, வசிட்டர் முதலான ஏழு ரிஷிசிரேஷ்டர்கள் இருக்கின்றனர்......]

"திருடனுக்குத் தேள்கொட்டியதுபோல்" என்று பழமொழி இருக்கிறது. அதைப்போல, திருடவந்த இடத்தில் நாய் குரைத்ததும் வசிட்டர், என்ன செய்வதென்றறியாமல் நடுங்கிவிட்டார். நாய் போடுகிற சத்தமோ, மாளிகையிலுள்ளவர்களை யெல்லாம் எழுப்பிவிடும் போலிருக்கிறது. குரைத்துக்கொண்டிருக்கும் நாயை எப்படி அடக்குவது?

வசிட்டருக்குத் திடீரென்று ஒரு யோசனை தோன்றிற்று. நாயின் அருகே சென்று, இருக்கு வேதத்தில் சில ஸ்லோகங்களை எடுத்துச் சொன்னார். உடனே நாய் குரைப்பதை நிறுத்தி, உறங்கிவிட்டதாம். பின் வசிட்டர் தப்பிச் சென்றுவிட்டார் என்று சொல்லப்படுகிறது. இந்தக் கதை நான்கு வேதங்களிலும் முதலாவதாகக் கூறப்படும் இருக்கு வேதத்தில் இருக்கிறது.

இருக்கு வேத ஸ்லோகங்களின் மகிமையைச் சொல்ல—அவை எப்படி ஒரு நாயைக்கூட வசப்படுத்தி உறங்கச் செய்துவிட்டது என்று காட்ட, இந்தக் கதையை வேதகர்த்தாக்கள் எழுதியிருக்கிறார்கள். ஆனால் இருக்குவேத ஸ்லோகங்களை உயர்த்திக்காட்டிய நேரத்தில்' திருடப்போன வசிட்டர் எவ்வளவு தாழ்ந்த நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார் என்பதை அவர்கள் கவனிக்கவில்லை. பிரம்மாவின் புதல்வர், சப்த ரிஷிகளில் சிறந்தவராக இருப்பவர், அவர் உணவுத்தானியத்துக்காகத் திருடச் சென்றார் என்றால் அது எவ்வளவு கேவலமானது? மேலும் இருக்குவேதம், அதைப் படித்தவர்களுக்கு எந்தவகையில் உதவிசெய்திருக்கிறது? திருடனைக் கண்டு குரைத்த நாயை அடக்கி, திருடனைத் தப்புவிக்கச் செய்துள்ளது! இது பெருமைதரக்கூடிய சம்பவமா?

வழிப்பறி கொள்ளைக்காரன் ஒருவன் முனிபுங்கவரைத் தடுத்து நிறுத்தினான். உடனே முனிபுங்கவர் இருக்குவேதத்திலிருந்து இரண்டு ஸ்லோகங்களை எடுத்துச் சொன்னார். அதைக் கேட்டதும், கொள்ளைக்காரனின் மனம் மாறியது. தீது எண்ணத்தைக் கைவிட்டான், முனிவர் காலடி வீழ்ந்து கதிபெற்றான். இப்படி ஒரு கதை இருந்தால், இருக்கு வேதத்திற்குப் பெருமையாக இருந்திருக்கும். அப்படியில்லாமல் கொள்ளையடிக்க வந்தவனை நாய் தடுத்தது: கொள்ளைக்காரன் இருக்குவேத ஸ்லோகத்

தைச் சொன்னான்; நாய் விலகியது, கொள்ளைக்காரன் தப்பித்துக்கொண்டான். இந்தக் கதை இருக்கு வேதத்துக்குப் பெருமை தரக்கூடியதா?

ஊரிலே உபகாரி என்று பெயரெடுக்க விரும்புபவன், நல்லகாரியங்களுக்கு, நல்லவர்களுக்கு உதவிசெய்யவேண்டும். அதைவிட்டுக் கன்னக்கோல் ஏந்தியவனுக்கும், கதவை யுடைப்பவனுக்கும் உதவிசெய்யப்போனால், திருடவந்தவனுக்கு எவ்வளவு தண்டனையோ, அவ்வளவு தண்டனை உதவிக்குப் போனவனுக்கும். அதைப்போல வருணன் மாளிகையில் வசிட்டர் திருடச் சென்றது இழிவான செய்கை. அந்த இழி செயலுக்கு நான்கு வேதங்களில் முன்மையான இருக்கு வேதம் துணையாக இருந்தது பெருமைதரக்கூடியதல்ல.

வேதங்கள் வேடதாரிகளுக்குப் பயன்படுவது போல, அந்தக் காலத்திலேயே திருடப்போகிறவனுக்குப் பயன்பட்டிருக்கிறது. இந்தக் கதை வேறு எந்த புராண ஏட்டிலுமல்ல இருக்கு வேதத்திலேயே இருக்கிறது.

சப்தரிஷி நட்சத்திர மண்டலத்தில் வசிட்டருக்குப் பக்கத்தில் இருக்கும் நட்சத்திரம் அருந்ததியாகும். அருந்ததி மகாப் பதிவிரதையென்றும், கற்புக்கு எடுத்துக்காட்டு என்றும் கூறப்படுகிறது. இந்து தர்ம முறைப்படி நடக்கும் திருமணங்களில், "அருந்ததி காட்டுதல்" என்ற சடங்கு ஒன்றிருக்கிறது. அதில், கல்யாணமாகும் பெண்ணுக்கு அருந்ததியைக்காட்டுவார்கள்; பகல் நேரத்தில் நட்சத்திரங்களே தெரியாது, இருந்தாலும் புரோகிதர் காட்டியதும், அதைப் பார்த்துவிட்டதுபோல மணப்பெண் பாவனைசெய்து, அந்த அருந்ததியைப் போல, உத்தமியாக இருப்பதாக ஒப்புக்கொள்கிறாள். திருமணம் செய்துகொள்ளும் இருவரில், மணமகள் அருந்ததியைப்போல நடந்துகொள்வதாக வாக்குத் தருவதுபோல, மணமகனும் வசிட்டரைப்போல நடந்துகொள்ள வேண்டுமென்று நினைத்தால், என்னவாகும்? புராணக்கதைப்படி வசிட்டர் விறகு பொறுக்கவந்த அட்சமாலிகையிலிருந்து, அருகேவந்த பெண் வேங்கை வரை, தனது காம இச்சைக்குப் பலியாக்கிக்கொண்டவர்; வறுமைப்பட்ட நேரத்தில் களவாடவும் சென்றவர். மணப்பெண் அருந்ததிபோலிருக்க வேண்டுமென்றால், கணவன் வசிட்டராக ஆகிவிட்டால்—அதாவது காமுகனாக, களவாடுபவனாக ஆகிவிட்டால், அவர்களுடைய இல்லற வாழ்வு எத்தனையதாகும்?

இந்து மத தர்மப்படி "கல் என்றாலும் கணவன், புல் என்றாலும் புருஷன்" என்று இருப்பவளே உத்தமியாவாள். அவள் பதி சொல் தவறாதவளாக இருக்கவேண்டும், கணவனே அவளுக்குத் தெய்வம் என்றெல்லாம் வர்ணிக்கப்படுகிறது. அத்தகைய மகா பதிவிரதைகளுக்கு உயர்ந்தவளாக—எடுத்துக்காட்டாக அருந்ததி வைக்கப்பட்டுள்ளாள். ஆனால் அருந்ததி, நட்சத்திர பதவியடைந்தது அவளுடைய உத்தமத் தன்மைக்காக அல்ல, கணவனை எதிர்த்துக்கொண்டதற்காக.

வசிட்டரும், அருந்ததியும் இல்லற வாழ்வு நடத்தும்பொழுது, இருவருக்குமிடையே மனவேறுபாடு தோன்றியது. வசிட்டரின் போக்கு அருந்ததிக்குப் பிடிக்கவில்லையாம். அவருடைய நடத்தைப்பற்றி, அவளுக்குச் சந்தேகம் உண்டாயிற்றாம். அவ்வாறு பதியை கடவுளைப்போல் பூஜிக்கும் அருந்ததிக்கேச் சந்தேகம் வந்து மனதில் சற்று வெறுப்பு தோன்றுமளவுக்கு, வசிட்டர் என்னசெய்தார் என்பதைப் புராணம் விவரித்துக் கூறவில்லை. கண்ட பெண்களின் கையைப் பிடித்து இழுத்தாரோ, காட்டு மிருகத்தைக் காம வேட்டையாடினாரோ, பக்கத்து வீட்டில் கன்னக்கோல் வைத்தாரோ, எதுவோ வசிட்டரின் போக்கில் அருந்ததிக்குச் சந்தேகம் உண்டாயிற்று.

மனைவி தம்மீது சந்தேகங்கொண்டுள்ளது மாமுனிவருக்குத் தெரிந்தது. சந்தேகத்தைப் போக்க அவர் முயலவில்லை, தமது நடத்தையைத் திருத்திக்கொள்ளவுமில்லை. மாறாக அருந்ததிமீது அவருக்குக் கடுங்கோபம் வந்தது. "ஆகா! கணவன் எப்படியிருந்தாலும், அவனைப் பற்றி மனைவி சந்தேகிப்பதா? பதிதான் மனைவிக்குத் தெய்வம். பதியைச் சந்தேகிப்பது, தெய்வத்தைச் சந்தேகிப்பதாகும். மகா பாபம்! மகா பாபம்! இதோ பிடி சாபம்!" என்று வசிட்டர் தம்மைச் சந்தேகித்த மனைவி அருந்ததிக்குச் சாபம் தந்தார். அந்தச் சாபத்தின்படி, அருந்ததியின் செந்நிற உடலில் கருமைபடர்ந்து, அவள் யாவரும் காணும்படி நட்சத்திரமாகவும் ஆக்கப்பட்டாள். இந்தக் கதைப்படி பார்த்தால், கணவன் எப்போப்

பட்ட கீழ்த்தர நடத்தையுடனிருந்தாலும் அவனைச் சந்தேகித்தால், மனைவிக்குத் தரப்பட்ட—இந்துமத தர்மப்படி தரவேண்டிய தண்டனையை அருந்ததி நட்சத்திரம் காட்டுகிறது என்று கூறலாம். வேதத்தின் நீதிப்படி, உயர்ந்த மனைவி இலக்கணத்துக்கு அருந்ததி கூட அருகதையற்றவளாகிறாள். ஏனெனில் அவள் தன் கணவனைச் சந்தேகித்த குற்றத்துக்கு ஆளாகி சாபக்கேடும் பெற்றிருக்கிறாள்.

அருந்ததிமேல், வசிட்டருக்குக் கோபம் வந்து சாபம் தந்தபோதிலும். அவளிடம்—அவள் உடலிடம் வைத்த மோகம் அவருக்கு எப்பொழுதும் குறைந்ததாகத் தெரியவில்லை. அருந்ததியிடம் வசிட்டருக்குப் பிறந்த குழந்தைகள் ஒன்று இரண்டல்ல, மொத்தத்தில் நூறு ஆகும். நூறு மக்களைப் பெற்றெடுக்கும் வரை அருந்ததியிடம் அவர் கோபம் காட்டியதாகத் தெரியவில்லை. அதற்குப்பின், அவளிடம் அருவருப்பு தோன்றியிருக்கவேண்டும். தன் உடல்நலம் குறைந்ததும், பிற பெண்களை நாடிச் செல்லுகிறார் என்ற சந்தேகம் அருந்ததிக்கு வந்திருக்கவேண்டும். இந்தச் சந்தேகத்தின் முடிவுதான் சாபம், அழகு குறைவு, எவரும் காண நட்சத்திரபதம்.

மற்றொரு புராணக்கதையில் வசிட்டர் தட்சப்பிரசாபதி என்பவரின் மகளை மணந்து அவளிடத்து ஏழு பிள்ளைகளைப் பெற்றார் என்று கூறப்படுகிறது.

ஏதோ! ரிஷி சிரேஷ்டர், அவருக்கு மனைவிகள் வாய்த்ததையும், அவர்களிடம் பிறந்த மக்களின் எண்ணிக்கையையும் பார்த்தால், அவருக்கு ஜபதபங்களைக் கவனிக்கவே நோமிருந்திருக்காது. இருந்தாலும், ஊரிலே ஒரு பெரிய மனிதருடைய பையன் காமுகனாகக் கெட்டலைந்தபோதிலும், கடைசியில் தந்தையின் செல்வாக்கால் நல்ல பதவி கிடைத்துவிடுவதுபோல, பிரமனுடைய மகனாக வசிட்டர் இருந்ததால், ரிஷி சிரேஷ்டரானார், சப்தரிஷி மண்டலத்தில் இடம் பெற்றார். சூரியகுலத்து அரசர்களுக்கு, ரகுபதி ராகவனுக்குக் குருவாக அமைந்தார். இருக்குவேதத்தில் ஏழாவது பாடல்களுக்கு ஆசிரியரானார். விசுவாமித்திரர் போன்ற பெரிய முனிவர்கள்கூட, "வசிட்டர் வாயால் ஒருதடவை ரிஷி என்று அழைக்கப்பட்டால் போதும்" என்று கூறப்படுமளவுக்கு உயர்ந்தவரானார்.

காசிபர்

பிரமதேவனின் மனதில் உதித்தவர்களில் மரிசி என்பவர் ஒருவர். பிரமனின் தோளிலும் தொடையிலும், தலையிலும் காலிலும் பிள்ளைகள் பிறந்ததுபோல், அவருடைய மனதிலும் பிள்ளைகள் உதித்திருக்கின்றன. மிக அதிசயந்தான். அந்தக் குழந்தைகளெல்லாம், தாயே இல்லாதவர்கள். அவர்களுக்குத் தந்தை மாத்திரம் உண்டு. அவ்வாறு தாயற்ற—தாய் இல்லாமல் பிறந்தவர் மரிசி. அந்த மரிசிக்குக் கலை என்பவளிடம் பிறந்தவர் காசிபர் என்ற ரிஷி சிரேஷ்டர்.

தட்சப்பிரசாபதி என்பவரிடம் பதிமூன்று குமரிகள் இருந்தனராம். அந்தப் பதிமூன்று பெண்களையும் காசிபர் மணந்துகொண்டார். அந்தப் பெண்களிடம். பல ரிஷிகளையும், தேவகுமாரர்களையும் பெற்றெடுத்ததல்லாமல் அரக்கர்களையும் பெற்றெடுத்தாராம். அதைவிட வேடிக்கையானது, இன்னும் மிருகவகைகளைக் கூட மக்களாக அடைந்தாராம். ஒரு மனைவியிடம் சிங்கம் புலி முதலிய மிருகங்களையும், மற்றொரு மனைவியிடம் குதிரை, கழுதைகளையும், வேறொருத்தியிடம் கருடன், பருந்துவகைகளையும், ஒரு பெண்ணிடம் பாம்புகளையும் பெற்றெடுத்தாராம். அதுமட்டுமல்ல, அவருடைய மனைவியரில் ஒருத்தி செடி, கொடிகளைக் குழந்தைகளைப்போலப் பெற்றெடுத்தாளாம். காசிபருடைய வீட்டைப் பார்த்தால், அது வீடாகவா இருந்திருக்கும்! பெரிய காடாகக் காட்சியளித்திருக்கும்! ஒருபுறத்தில் சிங்கம் புலி உறுமும். மறுபுறம் குதிரை ஓடும். கழுதை கானம்பயிலும். மேலே கருடன் வட்டமிடும். கீழே பாம்புகள் நெளியும். இடையிடையே செடிகொடிகள்—அவைகளும் காசிபருடைய மக்கள்—நகர்ந்துகொண்டிருக்கும். அந்த மிருகக் குழந்தைகளைப் பார்த்தால், தாய் தந்தையரை அடையாளமே காணமுடியாது. வசிட்டர் பெண்புலியை மனைவியாக்கிக்கொண்டு புலிக்குட்டிகளை மக்களாக அடைந்ததுபோல, காசிபரும் மிருகங்களை மனைவியாக ஆக்கிக்கொண்டாரோ என்னவோ, அவருடைய குழந்தைகள் மிருகங்களாக இருந்தன. ஒன்று இரண்டல்ல, எல்லாவகை மிருக—பட்சிகளும், ஆயிரக்கணக்கில்.

புராணத்தைப்படித்தால், இந்தக் கதையைத்

தவிர, காசிபர் வேறெதுவும் குறிப்பிடத் தக்கதாகச் செய்யவில்லை. பதின்மூன்று மனைவிகள்! மிருகங்களையும், பட்சிகளையும் பெற்றெடுக்க அவர் நடத்திய காமக்களியாட்டங்கள், அவ்வளவுதான்! அதற்காக இந்தக் காமசுந்தரருக்கு ரிஷி சிரேஷ்டர் என்ற*பட்டமும், சப்தரிஷி மண்டலத்தில் ஒரு இடமும் தரப்பட்டுள்ளது!

கௌதமர்

தேவாசுரர்கள் பாற்கடலைக் கடைந்து, அமுதமெடுத்தபொழுது, அதிலிருந்து அகலிகை தோன்றினாள். அவளுடைய அழகைக் கண்டு அங்கு கூடியிருந்த தேவர்களெல்லாம் ஓடிவந்தார்களாம், அவளைக் கைப்பற்றும் நோக்கத்துடன. மோகினி உருவிலிருந்த விஷ்ணுவைக் கவனிக்கக்கூடச் சற்றுநேரம் ஆட்களில்லாமற் போய்விட்டது. காரணமென்னவென்று அவர் பார்த்தார். தேனடையைச் சுற்றி வண்டுகள் மொய்த்துக்கிடப்பதுபோல, அகலிகையைச் சூழ்ந்த தேவர்களெல்லாம்—இந்திரன், சந்திரன், வருணன், வாயு, காந்தருவர், வித்தியாதரர். எல்லோரும் அவளின் கடைக்கண் பார்வைக்குக் காத்துக்கிடந்தனர். தேவர்கள் மட்டுமல்ல, முற்றும் துறந்த முனிபுங்கவர்கள்கூட, தலைமயிர் நரைத்தாலும்காம ஆசை நரைத்துப் போகாத ரிஷி சிரேஷ்டர்கள் அங்கு கூடியிருந்தனர். அகலிகையைப் பார்த்த ஆனந்தத்தில், கடைந்தெடுக்கப்பட்ட அமுதத்தைப் பற்றிக்கூட அவர்கள் மறந்துவிட்டார்கள். பாற்கடல் அமுதைப் பருகுவதற்குப் பதிலாக, அந்தப் பாவையின் அழகைப் பருகிக்கொண்டிருந்தனர், விரிந்த கண்களால்.

திருமால் பார்த்தார், அகலிகையைச் சூழ்ந்துள்ள கூட்டத்தை. இன்னும் சிறிதுநேரம் போனால், அகலிகையை யாரடைவது என்ற எண்ணத்தில், விபரீதச் சண்டையே வளர்ந்துவிடும்போலிருந்தது. அந்த அளவுக்குக் காம நோக்கும், மூர்க்கத் தன்மையும் கூட்டத்தினரிடை இருந்தன. கூட்டத்தை விலக்கிக்கொண்டு, திருமால் வந்தார், தனது உண்மையான உருவில். அகலிகையை யாருக்கு அளிப்பது என்பதில், ஒரு போட்டி உண்டாக்கினார். போட்டியில் யார் வெற்றியடைகிறார்களோ, அவர்களுக்கு அகலிகை தரப்படுவாள். போட்டியாவது, பக்கத்திலிருக்கும் கடலில் மூழ்கி, உள்ளேயே இருக்கவேண்டும். யார் நீண்டநே இருந்து வெளிவருகிறார்களோ அவர்களுக்கு தான் அகலிகை கிடைப்பாள்.

திருமால், போட்டியின் விவரத்தை வெ யிட்டதுதான் தாமதம், கடற்கரையிலிருந் தேவர்களும், முனிவர்களும் கச்சைகட்டி கொண்டு,கடலில் இறங்கித்,தண்ணீரில் அமிழ் துவிட்டார்கள். மும்மூர்த்திகளும், அகலி யும் கரையில் நின்று பார்த்துக்கொண்டிரு தனர்.

நாழிகள் நாட்களாயின. இருந்தாலு யாரும் எழுவதாயில்லை. கடலில் அமிழ்ந்த கள் அப்படியே இறந்துபோனார்களோ என்று தோன்றியது. கடைசியில் ஒரு தேவகுமார இரண்டுமூன்று நாட்கள் கழித்து எழுந்தா சுற்றிலும் பார்த்தான். ஒருவரையும் காணோ அகலிகையும், மும்மூர்த்திகளும் தான் இரு தார்கள். மற்றவர்களெல்லாம் தனக்குமுன் எழுந்து, போய்விட்டார்கள் என்று அவ நினைத்தான். ஏனென்றால், அந்த அளவு-காட்கணக்கில் யாராலும் தண்ணீருக்கு அமிழ்ந்திருக்கமுடியாது. வெற்றிபெற்ே மென்று, குதூகலத்துடன் அவன் திருமாலிட வந்தான் "அகலிகையைத் தாருங்கள் என்று.

"ஏன்?"

"போட்டியில் ஜெயித்துவிட்டேன். முதல வதாக...."

"எழுந்தாய் அவ்வளவுதான். போ என்று திருமால் சொன்னார்.

பின் தேவர்கள் ஒவ்வொருவராக எழுந்தா கள். ஒவ்வொருவரும் எழுந்திருக்கும்பொழுத தான்தான் வெற்றியடைந்திருப்போமென் நம்பிக்கையுடன் வந்தார்கள்.

சிறுகச் சிறுக எல்லாத்தேவர்களும் எழுந் வந்தார்கள். இருந்தாலும் இன்னும் சிலர் வ வில்லை. அக்னி, வருணன், வாயு, யமன், இ திரன், சூரியசந்திரர்கள் இவர்கள் இன்னு எழுந்திருக்கவில்லை. இவர்களுக்குள் அகலி யாருக்குக் கிடைப்பாள் என்று ஒருவராலு சொல்லமுடியவில்லை.

"மூச்சை அடக்கிக்கொண்டு, வாயுதேவன் இருந்துவிடுவான்."

“ கடலுக்கே அதிபதி, வருணன். அவனைக் கடல் ஒன்றும் செய்யாது !”

“ அக்னியைக் கண்டால், தண்ணீர் பணிந்து விடும் !”

“ யமன் என்றாலே எல்லோருக்கும் அவன் தயவு வேண்டும்!”

“ கடலிலே இரவு பூராவும் அமிழ்ந்து குளித்துவிட்டு, சூரியன் காலையில்தான் எழுந்து வருவான். அவனுக்கு இந்தப்போட்டி மிகச்சுலபம்!”

“ சூரியனைவிடச் சந்திரனிடத்தில்தான் கடலுக்குப் பிரியமதிகம். அதனால் இந்தப் போட்டியில் சந்திரனுக்கு அனுகூலம் அதிகம்!”

இப்படித் தேவர்கள் யார் வெற்றிபெறுவார்கள் என்பதைப்பற்றிப் பலவாறு பேசிக்கொண்டனர்.

பின் சிறிது நேரத்துக்கெல்லாம் யமன் எழுந்துவந்தான். பின் அக்னி, அவனைத் தொடர்ந்து வாயு, கடைசியில் வருணன் வந்தார்கள்.

தேவர்களில் இன்னும் மூன்றுபேர்தான் பாக்கி, சூரியன் சந்திரன், இந்திரன்.

மூச்சுத்திணறி, ஒளி குன்றி, நடுக்கத்துடன் சூரியன் எழுந்தான்.

இன்னும் இரண்டுபேர்தான் !

அடுத்தபடி சந்திரன் எழுந்தான், உறைந்த பனிக்கட்டியைப்போல.

கடைசியாக இந்திரன் எழுந்தான். தேவர்களெல்லாம் ஆரவாரித்தார்கள், தங்களுடைய தலைவன் வெற்றிபெற்றதைக் கூறி. தோற்றுப் போன மற்றவர்கள்கூட, இந்திரனுடைய வலிமையைப் பாராட்டினார்கள். இந்திரன் புத்தாடைகள் அணிந்து, சர்வாபரண அலங்காரத்துடன், பெருமிதத்துடன் அகலிகையைப் பெற்றுக்கொள்ள வந்தான். தன்னை நோக்கி வரும் இந்திரனைக் கண்கொள்ளாக்காட்சியாகக் கண்டுகொண்டிருந்தாள் அகலிகை.

இந்திரன் பெருமகிழ்ச்சியுடன், அருகே வந்தான், நாணத்துடன் தலைகுனிந்து நிற்கும் அகலிகையின் கையைப் பற்றச் சென்றான்.

“ சற்றுப் பொறு !” என்று கூட்டத்திலிருந்து ஒரு குரல் வந்தது.

“ அதோ !” என்று, ஒரு சுட்டுவிரல் கடலைக் காட்டியது.

கடலலையின் மத்தியில், ஒருவர் மெதுவாக எழுந்துகொண்டிருந்தார்.

போட்டியில் கலந்துகொண்டவர்களில் இன்னும் ஒருவர் பாக்கியிருந்திருக்கிறார். அவர் இப்பொழுதுதான் வெளியே எழுந்திருக்கிறார்! கரையில் இருந்த ஆரவாரம் அடங்கியது. இந்திரன் கையைப் பிசைந்துகொண்டு நின்றான்.

போட்டியில் எல்லோரையும் தோற்கடித்து, வெற்றிகண்ட அவன் யார்? கரையிலிருந்தவர்கள் அந்த உருவத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

களைப்பால் தள்ளாடிக்கொண்டு அவர் வந்தார்.

களைப்பு மட்டுமல்ல, வயதுகூட அதிகமிருக்கும்போலத் தோன்றியது, சற்று அருகே வந்ததும்.

தலையிலிருந்த தண்ணீரை வடித்துவிட்டார். தலை முழுவதும் வெண்மை பரந்துகிடந்தது.

இவர் ஏன் இந்தப் போட்டியில் கலந்துகொண்டார்?

யாரோ முனிபுங்கவர்?

முனிபுங்கவரா ? அவர் ஏன் இங்குவந்தார். இந்திரன், சந்திரன் அழகிய மனைவியைப் பெற வேண்டியவர்கள். இவரோ, முற்றும் துறந்தவர். அகலிகையைப்பெற இவர் ஏன் வந்தார்?

இவ்வாறு கூடியிருந்த தேவர்கள் பேசிக்கொண்டிருந்தனர்.

“ அவர்தான் கௌதமர் ! தீர்க்கமதமுனியின் புதல்வர் !” என்று ஒருவர் அறிமுகப்படுத்தினார்.

கௌதமர் மூச்சையடக்கி தியான நிலையிலிருப்பதில் பழக்கமுடையவராதலால், கடலுக்கடியில், உட்கார்ந்து அகலிகையை நினைத்துத் தவம்புரிந்து வெளிவந்தார், எல்லோருக்கும் கடைசியாக.

(தொடரும்)

அறியாமை இருள் அகல

[இரா. நெடுஞ்செழியன்]

இருளின்மூலம் பொருள்கள் விளக்கம் பெறுவதில்லை; ஆனால் ஒளியின் மூலம்தான் நாம் பொருள்களைக் கண்டறிந்துகொள்ள முடிகிறது. இருளினால் அறியாத் தன்மையும், ஒளியினால் அறியும் தன்மையும் ஏற்படுகின்றன. அதனால்தான் உலகோர் அறியாமையை இருளோடும், அறிவுடைமையை ஒளியோடும் தொடர்பு படுத்திக் கூறுவர். இருள் அகல வேண்டும் என்பதும், ஒளி பெறவேண்டும் என்பதுந்தான் உலகிலுள்ள பெரும்பாலான உயிர்களின், குறிப்பாக மனித இனத்தவரின் பேரவலாக இருந்துவருகிறது. உலகம் இன்பம் உற எப்படி இருள் அகன்று ஒளி தோன்றவேண்டியிருக்கிறதோ, அப்படியே, மனித சமுதாயம் இன்பம் உற, அறியாமையிருள் அகலவேண்டுவதும், அறிவுடைமையொளி வீசவேண்டுவதும் இன்றியமையாதனவாக இருக்கின்றன. அறியாமை, இருளாக இருப்பதால், நாம் அறிவுடைமையொளியை விரும்பி நிற்கவேண்டியவர்களாக இருக்கிறோம்.

மனித சமுதாயம் அடையவேண்டிய முன்னேற்றங்கள் எல்லாவற்றிற்கும், அடிப்படையாக அமையக்கூடிய சிலவற்றை, மக்களினம், அறிந்துகொள்ளவேண்டியதாக இருக்கிறது. அந்தச் சிலவற்றை மக்களினம் முதலில் கற்றுக் கொள்ளவேண்டும். அவையாவன: இந்த அண்டம் இயற்கையானது; மனிதன் மனிதனுக்குள்ள அறிவு ஆற்றல்களிலே மதிப்பும், நம்பிக்கையும் கொள்ளவேண்டும்; மூளையை வளர்க்க வளர்க்க, சில பல தீமைகளையும், சில பல தீங்குகளையும் நீக்கலாம், சிலபல தடைகளைப் போக்கலாம், இயற்கையின் சிலபல ஆற்றல்களின்—உண்மைகளின் உதவியைக் கொண்டு வளத்தையும் நலத்தையும் பெறலாம்; புதிய கண்டுபிடிப்புகள் மூலமும் தொழில் வளர்ச்சி மூலமும் உடலின் தேவைகளைப் போதுமான ஓரளவுக்கு நாமே நிறைவேற்றிக்கொள்ளலாம்; எண்ணுவதன் மூலமும், ஆராய்ச்சி நடத்துவதன் மூலமும், முயற்சிப்பதன் மூலமும் நாம் அறிவுப் பசியை ஓரளவுக்கு ஆற்றிக்கொள்ளலாம், என்பனவாகும்.

பெரும்பாலான மக்கள் இயற்கைக்கு மீறிய ஆற்றல் ஒன்றினிடத்து நம்பிக்கைவைத்துத், தமக்குத் தேவையானபொழுதெல்லாம் வேண்டிக்கொண்டால், அது வந்து உதவிசெய்யும் என்று எண்ணி, அதற்காக வழிபாட்டுமுறைகள் பலவற்றைக் கையாண்டு, இறுதியில் ஏமாந்துபோகின்றனர். மனிதனே கற்பித்துக் கொள்ளும் எந்த ஒரு இயற்கைக்கு மீறியவாற்றலிடத்தும், உதவியை எதிர்பார்க்கும் வழக்கத்தை, மனிதன் முதலில் கைவிடவேண்டும். எத்துணையோ ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நடைமுறையில் கையாண்டு பார்த்த பழக்கங்களையும் வழக்கங்களையும், ஆராய்ந்து கண்டறிந்தால், வழிபாடு மனிதனுக்கு எந்தச் செல்வத்தையும் உண்டாக்கிக்கொடுக்கவில்லை என்பதையும், கடவுள் வாழ்த்து எந்தவித நலத்தையும் ஏற்படுத்தவில்லை என்பதையும் அவன் அறிந்துகொள்வான். இயற்கைக்கு மீறிய ஆற்றலாகக் கருதப்படும் கடவுள், தாழ்த்தப்பட்டவர்களை உயர்த்தியதில்லை, ஆடையற்றோர்க்கு ஆடை வழங்கியதில்லை, பசித்தவர்களைப் புசிக்கச் செய்ததில்லை, அறியாமை நிரம்பியவர்க்குப் பாதுகாப்பு அளித்ததில்லை, பஞ்சத்தைப் போக்கியதில்லை, அடிமைக்கு விடுதலை வாங்கித்தந்ததில்லை என்பதை அவன் அறிந்துகொள்ள வேண்டும்.

இயற்கைக்கு மீறியவாற்றல் என்று ஒன்று இருக்கமுடியாது என்பதுபற்றி மனத்தெளிவு ஏற்பட்டான பிறகு, மனிதன் உலகின் நடவடிக்கைகளிலேயும், இயற்கையின் உண்மைகளிடத்திலேயுந்தான் முழுக்கவனம் செலுத்தவேண்டும். மனிதனின் சிந்தனைக்கு மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளின் வழியாக வரும் உணர்வுதான் அடிப்படையாக அமைகிறது. ஐம்புலனறிவுக்கு முரண்படாத வகையில் வளரும் சிந்தனைதான் உண்மைக்கு ஒத்ததாகவும், நல்லாக்கத்திற்கு ஏற்றதாகவும் இருக்கமுடியும். ஐம்புலனால் பெற்ற அறிவைக் கூட்டியோ குறைத்தோ, மாற்றியோ திருத்தியோ கற்பனை செய்துகொண்டே போனால், அது உலக நடவடிக்கைகளுக்கும், இயற்கையின் உண்மை விதிகளுக்கும் மாறுபட்டதாகப் போய்முடிந்துவிடும். எனவே நடைமுறை உண்மைக்கு மாறுபடாத சிந்தனையைப் பெற முயற்சிப்பதே, மனிதனின் இன்றியமையாக் கடமையாகும்.

முதலில் அவன், தனது ஆற்றல் வீணாவதையும், செல்வம் வீணாவதையும் தடுக்க முயலவேண்டும். ஒவ்வொரு நல்ல ஆடவரும், ஒவ்வொரு நல்ல பெண்டிரும் போர் முறையை ஒழிக்க ஆனபாடெல்லாம் படவேண்டும். ஏனெனில் போர் புரியும் முறை காட்டுமிராண்டிக் காலத்தில் மனிதனுக்குப் பழக்கப்பட்டுவிட்ட பண்பாகும். அந்தக் காட்டுமிராண்டிப் பண்புக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் வகையில் எத்தகைய முயற்சி செய்யப்பட்டாலும் அதனை அடக்கி ஒடுக்க ஒவ்வொருவரும் முன்வரவேண்டும். காட்டுமிராண்டிக் காலத்தில் மனிதன் அவனது வலிமையை நம்பி வாழவேண்டியவனாக இருந்தான். வலிவுதான் அவனுக்கு வழிகாட்டியாக அமைந்திருந்தது. எது சரி, எது தவறு என்பதை அவனது வலிவுதான் முடிவு செய்தது. நீதியை, உரிமையைத், தேவையை நிறைவேற்றிக்கொள்ள காட்டுமிராண்டி மனிதன் கொண்டிருந்த கருவி வலிமைதான். வல்லான் வகுத்ததே வழி என்ற முறையில் அமைந்திருந்தது. நாகரிக மனிதர்கள் என்று கருதப்படுபவர்கள், தங்களுக்குள் ஏற்படும் மாறுபாடுகளைத் தீர்த்துக்கொள்ள, போர்ப்படைகளின் உதவியை நாடமாட்டார்கள். அவர்கள் தங்கள் மாறுபாடுகளைப் போக்கிக்கொள்ள நடு நிலையாளர்களையும், நீதி மன்றங்களையுந்தாம் நாடுவார்கள். இது காட்டுமிராண்டி மனிதனுக்கும் நாகரிக மனிதனுக்கும் உள்ள ஒரு பெரிய வேறுபாடாகும். ஆனால் நாடுகள் ஒன்றிற்கொன்று மாறுபடும்போது, போரிடும் காட்டுமிராண்டித் தன்மைக்குத் தம்மை ஆளாக்கிக்கொண்டுவிடுகின்றன. அவைகளிடையே ஏற்படும் தகராறுகளைத் தீர்த்துக் கொள்ள, போரைத் தவிர வேறெதுவும் முடிந்த முடிவாக இருப்பதில்லை. ஒவ்வொரு நாடும் தன்னுடைய நடவடிக்கைகளைத் தானே சிந்தித்துத் தனக்குத்தானே தீர்ப்பளித்துக் கொள்ளுகின்றது; உடனே அந்தத் தீர்ப்பைச் செயலாற்றவும் முனைந்துவிடுகிறது. இதனால் போர் மூண்டுவிடுகிறது. இந்த நேரத்தில் ஆயிரக்கணக்கானவர்கள், தங்களைப்போன்ற மனிதர்களையே கொல்லுவதற்கென்று, பல்வேறு விதமான பயங்கர ஆயுதங்களைக் கண்டுபிடிக்கிறார்கள். நாகரிகம் மிகுந்துள்ளதாகக் கருதப்படும் மேலை நாடுகளில், பத்தொன்பது நூற்றாண்டுகாலத்திற்கு மேலாக அமைதி பற்றிப் போதனை செய்யப்படுகிறது. அப்படியிருந்தும் எந்த நாடுகள் நாகரிகத்தில் மிகச் சிறந்தனவாகக் காணப்படுகின்றனவோ, அந்த நாடுகள்தாம், போரிலே மிகவிருப்பமுடையனவாகத் திகழ்கின்றன. ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும், சீனாவிலும் பிற இடங்களிலும் இலட்சக்கணக்கானவர்கள், கோடிக்கணக்கானவர்கள் போர்க் கருவிகளைத் தாங்கி, எந்த நொடியிலும் களத்தில் இறங்கத் தயாராக இருக்கிறார்கள். எல்லா நாகரிக நாடுகளும் தங்களுடைய எல்லைக்கோடுகளின் ஓரத்தில் விமானப்படைகளையும், பீரங்கிப் படைகளையும் கொண்டுவந்து குவித்துக் கொண்டிருக்கின்றன. போர்முழக்கமிடும் சண்டைக்கப்பல்கள் உலகப் பெருங்கடல்கள் எல்லாவற்றிலும் வட்டமிட்டுக்கொண்டிருக்கின்றன. நாகரிக நாடுகள் போர்முறை என்னும் காட்டுமிராண்டிப் பண்புக்குத் தம்மை இரையாக்கிக்கொண்டு, தம்மைத்தாமே அழித்துக்கொள்ள காத்துக்கிடக்கின்றன. மக்கள் அமைதியாக வாழவேண்டியதன் இன்றியமையாமைபற்றி, மதக்குருமார்களால் மிகவாகப் போதனை புரியப்பட்ட நாடுகள்தாம், போர் ஆர்ப்பாட்டங்களைப் புரிந்துகொண்டிருக்கின்றன. போருக்காகச் செலவழிக்கப்பட்ட தொகையும், செலவழிக்கப்படும் தொகையும் கோடானுகோடி ரூபாய்களாகும். போருக்கென்று வாங்கிய கடனுக்கு வட்டி செலுத்த முடியாத நிலையில் பல நாடுகள் தத்தளித்துக்

கொண்டிருக்கின்றன. நாட்டின் போர் வெறியின் காரணமாகப் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் ஏழையும் பாழையும், பாட்டாளியும் தொழிலாளியுமே ஆவார்கள். மனித சமுதாயத்தை எப்பொழுதும் அலக்கழித்துவரும் இந்தப் போர் முறை என்னும் காட்டுமிராண்டிப் பண்பு அடியோடு அகற்றப்படவேண்டும்.

இன்றைய நிலையில் உலகிலுள்ள பல்வேறு நாட்டின் அரசுகளும், போர்ப் படைகளைத் திரட்டவும், போர்க்கருவிகளை உற்பத்தியாக்கவும் தங்கள் வருமானத்தில் ஏறத்தாழப் பாதி அளவு செலவிடுகின்றன. உலக நாடுகள் முழுவதும் கணக்கிட்டுப் பார்த்தால், உலக அரசுகளின் பாதிவருமானம் அழிவு வேலைக்காகவும், மீதி பாதி வருமானம் எல்லா ஆக்க வேலைகளுக்காகவும் செலவழிக்கப்படுகின்றன என்பதைக் காணலாம். அழிவு வேலைக்காக ஒதுக்கப்படும் பணத்தை ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்துவது என்ற நல்ல நிலை ஏற்பட்டால், எத்தனை எத்தனைப் பள்ளிச் சாலைகளும், வைத்திய சாலைகளும் ஆங்காங்கு எழும்பும்! எத்தனை எத்தனைப் பேர்களின் பசி தொலையும்; வறுமை அகலும்; வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியும்! எத்தனை எத்தனையோ ஆடையற்றோர்க்கு ஆடை கிடைக்கும்; வீடற்றோர்க்கு வீடு கிடைக்கும்; சோறற்றோர்க்குச் சோறு கிடைக்கும்.

மனித சமுதாயம் வளர்ச்சியுறவேண்டுமானால், உலகில் போர் அச்சம் ஒழியவேண்டும். நாட்டுக்கு நாடு போர் மூளாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமானால், அதற்கென உலக நீதிமன்றம் ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும். அது தொடர்ந்து நடந்துகொண்டேயிருக்க வேண்டும். அதன் நீதிபதிகள் எல்லாநாட்டு அரசாங்கங்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்கவேண்டும். எல்லா நாடுகளும் அந்த நீதி மன்றத்திடம் மதிப்பு செலுத்த வேண்டும்; அதன் தீர்ப்புக்கு எல்லா நாடுகளையும் கட்டுப்படுத்தவேண்டும். எல்லா நாடுகளிலிருந்தும் போர்ப்படைக் கருவிகளை குறைப்பதும், அகற்றுவதும் ஆன நடவடிக்கைகளையெல்லாம் அந்த நீதிமன்றம் மேற்கொள்ள வேண்டும். தன்னுடைய தீர்ப்புகளை நடைமுறைக்குக் கொண்டுவர, அந்த உலக நீதிமன்றம், தேவையான காலம்வரையில் ஒரு பாதுகாப்புப் படையை வைத்துக்கொள்ளலாம். அந்த வேலையைத்தவிர வேறு எந்த வேலைக்கும் அதனைப் பயன்படுத்தக் கூடாது. போர்புரியும் காட்டுமிராண்டி முறை ஒழிக்கப்பட்டால்தான் சமுதாயம் முன்னேறுவதற்குத் தங்குதடையற்ற வழி ஏற்பட இயலும்.

போரினால் ஏற்படும் கொடுமைகளை நினைத்துக்கொண்டால், எவருடைய நெஞ்சும் வேதனையுறவே செய்யும். மண்டைகள் சிதற, உறுப்புகள் அறுந்துபட, குருதி வழிந்து ஓடுவதும், பெண்கள் விதவைகளாகிக் கண்ணீர் விட்டுக் கதறுவது, குழந்தைகள் அனாதைகளாகி வாடி வதங்குவது, மக்கள் வறுமையால்—ஏழ்மையால்—பசியால்—பஞ்சத்தால்—நோயால் வாடுவதுபோன்ற காட்சிகள் அறவே அகற்றப்பட வேண்டுமாயின், அவற்றிற்கு அடிப்படைக் காரணமாக விளங்கும் போர் என்னும் காட்டுமிராண்டி முறை ஒழியவேண்டும்.

போர்புரியும் அறியாமை யிருளிலிருந்து அமைதியான வாழ்வு என்னும் அறிவொளி நிலைக்கு மக்களை இழுத்துச் செல்லவேண்டியது முதற் கடமையும் முக்கியமான கடமையுமாகும்.

மன்றம்

மலர் - 2

1953 - 54

24 இதழ்கள்கொண்டது
அழகிய முறையில் பைண்ட் செய்யப்பட்ட
வால்யூம் விலை ரூ. 8-0-0

மலர் 2-ல் முதல் இதழ் தவிர மற்ற 23 இதழ்களும் பைண்ட் செய்யப்படாமல் அனுப்ப ரூ. 6-0-0 அனுப்பவேண்டும்.

தனி இதழ் வேண்டுவோர் (1-5-53 தவிர) இதழ் ஒன்றுக்கு 5 அணா வீதம் தபால்தலைகள் அனுப்புதல் வேண்டும்.

நிர்வாகி, மன்றம்,
26, நைனியப்பன் தெரு, மண்ணடி,
சென்னை-1.

விளைவும் விளக்கமும்

வடநாட்டவர்கள் திராவிடநாட்டைச் சுரண்டக்கூடாது, அப்படிச் சுரண்டுபவர்கள் வெளியேற்றப்படவேண்டும் என்று தி. மு. கழகம் கூறுவது நியாயமானால், இந்தியர்கள் இலங்கையைச் சுரண்டக்கூடாது, அவர்கள் எல்லோரும் வெளியேறிவிடவேண்டும் என்று இலங்கை ஆட்சியாளர்கள் கூறுவதும் நியாயமாகத்தானே இருக்கவேண்டும்? பின் இலங்கை ஆட்சியாளரின் முடிவைக் கண்டிக்க முற்படுவானேன்?

திராவிட நாட்டைச் சுரண்டி, வடநாட்டுக்குப் பெரும்பொருள் கொண்டுபோய்ச் சேர்க்கும் வடநாட்டுக் கொள்ளைக்காரர்களும், மேலை நாடுகளுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும் மேலை நாட்டு வெள்ளைக்காரர்களும் திராவிடத்தைவிட்டு வெளியேற்றப்படவேண்டும் என்றுதான் தி. மு. கழகம் திட்டவட்டமாகக் கூறிவருகிறது. அதுபோலவே இலங்கையைச் சுரண்டி இந்தியாவுக்குப் பெரும்பொருள் கடத்திவரும் இந்தியர்கள் இலங்கையைவிட்டு வெளியேற்றப்படுகிறார்கள் என்றால், அதனைக் குறைகூறவோ, கண்டிக்கவோ தி. மு. கழகம் முற்படவில்லை; அதனை நியாயமான செயல் என்றே ஒப்புக்கொள்கிறது.

ஆனால் இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட இருக்கும் இந்தியர்கள் அத்தனைப்பேரும், இலங்கையைச் சுரண்டி சொந்த நாட்டை வாழவைத்துவருபவர்கள் அல்லர். இலங்கையில் வாழும் இந்தியர்களில் 100-க்கு 95 பேர்கள் தென்னாட்டவர்கள்—திராவிடர்கள். அவர்களில் 100-க்கு 99 பேர்கள் உழைத்துப் பிழைக்கச் சென்றவர்களேயொழிய, சுரண்டிக் கொள்ளையடிக்கச் சென்றவர்களல்லர். அவர்களில் பெரும்பாலோர் ஐந்தாண்டு, பத்தாண்டு, பதினைந்தாண்டு காலத்திற்கு மேலாக இலங்கையிலேயே வாழ்ந்து, ஏறத்தாழ இலங்கையைத் தங்கள் தாயகமாக ஏற்படுத்திக்கொண்டவர்கள். உழைத்துப் பிழைக்கச் சென்றவர்களை பல ஆண்டு காலம் வாழ்ந்து இலங்கையோடு இலங்கையராய் ஆகிவிட்டவர்களை— இலங்கையைத் தாயகமாக ஏற்றுக்கொள்ள மனமார விரும்புபவர்களை—தங்கள் உழைப்பினைக் கொடுத்து இலங்கையின் தோட்டப் பகுதிகளை உருவாக்கினவர்களை வெளியேற்றுவது—அவர்களையெல்லாம் அகதிகளாக்குவது—நாடோடிகளாக மாற்றுவது நியாயமாகாது, நேர்மையாகாது, நன்றியுடைய செயலாகாது என்றுதான் தி. மு. கழகம் கூறுகிறது. உள்ளபடியே சுரண்டிக் கொள்ளையடிக்கும் இந்தியர்களை மட்டுமே இலங்கை அரசாங்கம் வெளியேற்றுகிறது என்பது நிலைமையாக இருக்குமேயானால், அதுபற்றித் தி. மு. கழகம் கவலைப்படாது; குறைகூற முன்வராது.

இலங்கை முதலமைச்சர் தோழர் கொத்தலாவாலாவின் நன்றிகெட்ட முரட்டுப்போக்கினால் நாளடைவில் பாதிக்கப்படுபவர்கள் எட்டு லட்சம் பேர்கள் என்று சொல்லுகிறார்கள். கிட்டதட்ட அத்தனைப்பேரும் தென்னாட்டவர்கள்தாம். இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய உண்மை என்னவென்றால், அவர்கள் அத்தனைப்பேரும் தாமாகவே இலங்கைசென்று சேர்ந்தவர்கள் அல்லர். வெள்ளையர்கள் ஆண்ட காலத்தில் இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளின்பேரில், இந்திய அரசாங்கம் கூட்டி அனுப்பிக்கக் கூலிகளாகச் சென்றவர்களே அத்தனைப்பேரும். காரியம் முடிந்த பிறகு கருவேப்பிலையைத் தூக்கி எறிவதுபோல், தேவையான அளவுக்கு உழைப்பைப் பெற்றுக்கொண்டான பிறகு உழைத்தவர்களை வெளியேற்றுவது என்றால், அது எவ்வளவு நியாயமற்றதும், நேர்மையற்றதும், நன்றிகெட்டதும் ஆன செயலாகும் என்பதை நடுநிலை நல்லறிவு படைத்தோர் எவரும் ஒப்புக்கொள்ளவே செய்வர். அவர்களெல்லோரும் இந்தியர்கள்— தென்னாட்டவர்கள் என்ற உணர்வோடு இலங்கையில் வாழவேண்டுமென்று தி. மு. கழகம்

கூறவில்லை. 'அவர்கள் தாங்கள் இந்தியர்கள் —தென்னாட்டவர்கள் என்ற உணர்வை மறந்து விடவேண்டியதுதான்; இலங்கை அரசாங்கமும் அவர்களை இலங்கையர்களாகத் தழுவிக்கொள்ள வேண்டியதுதான்' என்றுதான் கழகம் கூறுகிறது.

சுரண்ட வந்தவர்களை வெளியேற்றுவதற்கும், பிழைக்க வந்தவர்களை வெளியேற்றுவதற்கும் நிரம்ப வேறுபாடு உண்டு. சுரண்ட வந்தவர்களை விரட்டுவது நியாயமான செயலேயாகும். ஆனால் பிழைக்க வந்தவர்களை வெளியேற்றி, அவர்களை அகதிகளாக்குவது நியாயமான செயலாகாது. இனிமேல் பிழைக்கவரும் வெளிநாட்டாரை ஒரு நாடு தடுத்து வெளியே நிறுத்திவிடுவது வேண்டுமானால் நியாயமாகலாமே யொழிய, பிழைக்கவந்து பல ஆண்டுக்காலம் வாழ்ந்துவிட்டவர்களை அவர்கள் விருப்பத்திற்கு மாறாக விரட்டியடிப்பது நியாயமான செயல் என்று சொல்ல முடியாது. இந்த அடிப்படையில்தான், தி. மு. கழகம், வடநாட்டுச் சுரண்டல்காரர்கள் வெளியேற்றப்பட வேண்டியதை ஆதரிக்கிறது; இலங்கைவாழ் உழைக்கும் இந்தியர்கள் வெளியேற்றப்படுவதைக் கண்டிக்கிறது.

வடநாட்டுக்காரரோ அல்லது வெளிநாட்டுக்காரரோ, திராவிடத்திற்குப் பிழைக்கவந்து, நீண்ட காலம் இங்கேயே வாழ்க்கையை நடத்தித், திராவிடத்தையே தாயகமாகக் கொள்ளும் விருப்பங்கொண்டு, திராவிடத்தின் நலத்திலே அக்கரையுள்ளவராக இருப்பின், அத்தகையோர் வெளியேற்றப்படவேண்டும் என்று தி. மு. கழகம் ஒருபோதும் கூறியதில்லை; ஒருபோதும் கூறாது.

எந்த ஒரு நாட்டை எந்த ஒரு வெளிநாட்டுக்காரன் சுரண்ட முற்பட்டாலும், அவன் தடுக்கப்படத்தான் வேண்டும்; எந்த ஒரு நாட்டில் எந்த ஒரு வெளிநாட்டுக்காரன் பிழைக்கவந்து பல ஆண்டுகள் வாழ்ந்துவிட்டவனானாலும், அவன் காப்பாற்றப்படத்தான் வேண்டும்.

புகைவண்டி நிலையத்தின் பெயர்ப்பலகையிலுள்ள இந்தி எழுத்துக்களை அழிக்க முற்படுபவர்கள், ரூபாய் நோட்டிலுள்ள இந்தி எழுத்துக்களை அழிக்க ஏன் முற்படவில்லை ?

திராவிடத்திற்கு இந்தி எந்தவகையிலும் அவசியமில்லை என்பதையும், அதனால் யாதொரு பலனும் ஏற்படப்போவதில்லை என்பதையும், மாறாகத் தாய்மொழி வளர்ச்சியைத் தடுக்கும் என்பதையும் தி. மு. கழகத்தவராகிய நாம் அடிக்கடி வற்புறுத்திக் கூறிவருகிறோம். வடநாட்டு இந்திமொழிக்காரர்கள் தங்கள் தாய்மொழி இந்தியா முழுவதும் பரவவேண்டும் என்னும் ஆர்வத்தின் காரணமாகவும், தங்கள் மொழி ஆதிக்கத்தை எங்கணும் நிலைநாட்ட வேண்டும் என்னும் ஆதிக்க உணர்வின் காரணமாகவும், இந்திய அரசாங்கத்தின் தயவின் பேரில், இந்தியை, இந்தியா முழுவதும், குறிப்பாகத் திராவிடத்தில், எல்லாத்துறைகளிலும் கட்டாயமாகப் புகுத்தும் முயற்சி நடைபெற்றுவருகிறது. அப்படிப்பட்ட முயற்சிகளிலே ஒன்றுதான் புகைவண்டி நிலையங்களிலுள்ள பெயர்ப்பலகைகளில் இந்தி எழுத்துக்கள் காணப்படுவதாகும்.

திராவிடத்திற்கு இந்தி ஏன் அவசியமில்லை என்பதற்கான காரணங்களை ஏடுகளின் மூலமாகவும், கூட்டங்களின் வாயிலாகவும், மாநாட்டுத் தீர்மானங்கள் மூலமாகவும் எடுத்துக்கூறி வருகிறோம். இந்திய அரசாங்கம் எதற்கும் செவிசாய்ப்பதாக இல்லை. இந்தியைத் திராவிடம் விரும்பவில்லை என்பதை உணர்ந்தவும், திராவிடப் பெருங்குடி மக்களை உணர்ச்சி பெறச் செய்யவும், இந்திய அரசாங்கத்தின் கண்ணையும் செவியையும் திறக்கவும், வடநாட்டு இந்தி மொழி வெறியர்களுக்கு அறிவிக்கவும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஈடுபடவேண்டிய அவசியம் நமக்கெல்லாம் உண்டாகிறது. அப்படிப்பட்ட இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின் ஒரு எடுத்துக்காட்டுதான், புகைவண்டி நிலைய இந்திப் பெயரழிப்புப் போராட்டமாகும். இந்திப் பெயர்களை அழிப்பது என்பது, இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின் ஒரு எடுத்துக்காட்டே தவிர, புகைவண்டி நிலையத்திலுள்ள இந்திப் பெயர்களை அழித்துவிட்டால், எங்கணும் உள்ள இந்தி எழுத்துக்களெல்லாம் அழிந்துவிடும் என்பதற்காக அல்ல. ரூபாய் நோட்டிலுள்ள இந்தி எழுத்துக்களை அழிப்பதைக் கிளர்ச்சியாகக் கொள்வதைவிட, புகைவண்டி நிலையப் பெயர்ப்பலகைகளிலுள்ள இந்தி எழுத்துக்களை அழிப்பது வெளிப்படையானது, விளக்கமாகத் தெரியக்கூடியது, பொதுமக்களுக்கும் அரசாங்கத்துக்கும் தெளிவாக அறிவிக்கக்

கூடியது, நஷ்டம் ஏற்படாதது, கிளர்ச்சிக்கு ஏற்றது என்ற காரணத்தால்தான், பெயர்ப் பலகையின் இந்தி அழிப்புப் போராட்டத்தில் நாம் ஈடுபட்டோம். புகைவண்டி நிலையப் பெயர்ப்பலகையில் எழுதப்பட்டிருக்கும் இந்தி எழுத்துக்களை அழிப்பது நோக்கத்தை வெளிப் படுத்தும் அறிகுறியாகும் என்பதைப் புரிந்து கொள்ளமாட்டாத புல்லறிவாளர்கள்தாம் ரூபாய் நோட்டுகளிலுள்ள இந்தி எழுத்துக்களை ஏன அழிக்கவில்லை என்று கேட்பர்! திரா விடத்திற்கு இந்தி அவசியமில்லை என்ற நோக் கம் வளர்ந்துகொண்டே வந்து, திராவிடநாடு திராவிடர்க்காகும்போது, ரூபாய் நோட்டுகளி லுள்ள இந்தி எழுத்துக்கள் மட்டுமல்ல, தேவை யற்ற இடங்களில் இருக்கும் இந்தி எழுத்துக் கள் எல்லாமும், ஒருவரியில் போடும் உத்தர வின்மூலம் அழிந்தேபோகும்.

வெள்ளையர் ஆட்சிமுறையை இந்திய மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை, அவர்களுடைய ஆட் சியை மதிப்பதாக இல்லை என்பதை வெளிப் படுத்தும் அறிகுறியாக, வெள்ளைக்காரர்கள் ஏற்படுத்தி வைத்திருந்த சட்டங்கள் பலவற் றில், 'உப்பு காய்ச்சக்கூடாது' என்ற ஒரு சட்டத்தைமட்டும் உடைத்தெறிய காந்தியார் முற்பட்டார். அந்த ஒரு சட்டத்தை உடைத் தெறிவதன் மூலம் ஏற்படும் உணர்ச்சி, வெள் ளையர் ஆதிக்கம் முழுவதையும் ஒழிக்க ஏதே னும் ஒரு காலத்தில் பயன்படும் என்பதுதான் காந்தியாரின் நோக்கமாகும். அதுபோலத்தான் பெயர்ப்பலகையிலுள்ள இந்தி எழுத்துக்களை அழிப்பதன் மூலம் ஏற்படும் உணர்ச்சி, ஏதே னும் ஒரு காலத்தில் இந்தி மொழி ஆதிக்கம் அத்தனையையும் அழிக்கும் வல்லமை வாய்ந் தது என்று நாம் கருதுகிறோம். எப்படி காந்தி யார் எல்லா சட்டங்களையும் உடைத்துக்கொண் டிருக்கவில்லையோ, அப்படித்தான் நாமும் எங்கும் உள்ள இந்தி எழுத்துக்களையெல்லாம் அழித்துக்கொண்டிருக்கவில்லை. அவர் எதிர்ப் பைக் காட்டும் அறிகுறியாக ஒரு சட்டத்தை உடைத்தார்; அதுபோலவே நாமும் எதிர்ப் பைக் காட்டும் அறிகுறியாகப் பெயர்ப்பலகை யிலுள்ள இந்தி எழுத்துக்களை அழிப்பதை மட்டும் ஏற்றுக்கொண்டோம்.

ஃ ஃ ஃ

வைதீகத் திருமணங்களில் மேற்கொள்ளப் படும் நடவடிக்கைகளைச் சடங்குகள் என ஒதுக் கித் தள்ளும் சீர்திருத்தக்காரர்கள், சீர்திருத்தத் திருமணத்தில் சிலபல முறையான நடவடிக்கை களை மேற்கொள்ளும்போது, அவைகள் மட்டும் சடங்குகள் ஆகாமற்போகுமா? அப்படிக் கொள் ளுவது எப்படிப் பொருந்துவதாகும்?

சீர்திருத்தக்காரர்கள், காலத்துக்கும் கருத் துக்கும் அறிவுக்கும் நடைமுறைக்கும் ஒத்து வராத, குருட்டு நம்பிக்கையின்பாற்பட்ட, மூடச் சடங்குகளை அகற்ற முற்படுகிறார்களே யல்லாமல், 'சடங்கு' என்பதற்காக எதனையும் ஒழிக்க முற்படுவதில்லை. 'சடங்கு' என்பதே அறவே கூடாது என்றால், மக்கள் விலங்கினங் களைப்போல் வாழவேண்டியிருக்குமேயொழிய, சமுதாய அமைப்பாக வாழமுடியாது. சமுதாய அமைப்பே சிலபல சடங்குகளை அடிப்படையா கக் கொண்டு அமைக்கப்பட்டதுதான். ஆண்— பெண் ஒருவனும் ஒருத்தியுமாகக் கூடிவாழ்வது என்பதும், குடும்பம் என்பதும், உறவினர் என் பதும், ஊர் அவை என்பதும், அரசு என்பதும் சிலபல சடங்குகளை அடிப்படையாகக்கொண்டு கட்டப்பட்டவைகளேயாகும். அந்தச் சடங் குகள் கருத்திற்கும் நாட்டிற்கும் ஏற்றவாறு மாறுதல்களுக்குள்ளாகி வளர்ந்தோங்கி வரு வனவாகும்.

சீர்திருத்தத் திருமணத்தில் கூட்டம் குழுமி யிருப்பதும், மணமக்கள் தனியே உட்கார்ந் திருப்பதும், தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவதும், தலைவர் தலைமைதாங்குவதும், மணமக்கள் வாழ்க்கை ஒப்பந்தங்கள் படிப்பதும், அவர்கள் மாலை மாற்றிக்கொள்வதும்—மோதிரம் மாற்றிக் கொள்வதும் சடங்குகள் ஆகாவா என்றால், ஆகாது என்று யாரும் கூறார். இன்றைய உல கியல் போக்குக்கும், நடைமுறைக் கருத்துக் கும் இவை யொட்டிவருவதால், இந்த முறை களைப் பழக்கத்தில் வைத்துக்கொண்டிருக்கச் சீர்திருத்தக்காரர்கள் எண்ணுகிறார்கள். இன் னும் பல ஆண்டுகள் கழித்து இந்தச் சடங்கு களே மூடச்சடங்குகளாக மாறி, வழக்கத்தி லிருந்து மறையவும் கூடும். வைதீகத் திரு மணங்களில் கையாளப்படும் ஆலங்குச்சி அர சங்குச்சிகளைப் போட்டு அக்னி வளர்த்தல், மும்மூர்த்திகளையும் முப்பத்துமுக்கோடி தேவர் களையும் சாட்சிகளாக வரவழைத்தல், தேவர் களுக்குத் தெரியக்கூடியவை என்று சமஸ் கிருத மொழி மந்திரத்தை ஓதுதல், அம்மி

மிதித்து அருந்ததிகாட்டுதல், கன்னிகாதானம் செய்தல், தாலிகட்டுதல் போன்றவைகள் அறிவாராய்ச்சிக்குப் பொருந்தி வராமல், குருட்டு நம்பிக்கையின்பாற்பட்ட மூடச்சடங்குகள் என்ற காரணத்துக்காக அவற்றை ஒதுக்கச் சீர்திருத்தக்காரர்கள் முனைகிறார்கள்.

'சடங்கு' என்ற முறை அல்ல சீர்திருத்தக்காரருக்கு மாறுபாடாகக் காணப்படுவது, அதில் காணப்படும் காலத்துக்கும் கருத்துக்கும் ஒட்டிவாராத குருட்டு நம்பிக்கையும் மூடத்தனமும்தான் மாறுபாடாகக் காணப்படுவனவாகும்.

ஃ ஃ ஃ

தாலிகட்டுவது மூடச்சடங்கு ஆகுமா ?

'தாலி' என்றால் தொங்குகிற பொருள் என்று பொருள். தாலுதல் என்றால் தொங்குதல். 'பொன்தாலி' என்றால் 'பொன்னாகிய தொங்குகிற பொருள்' என்று பொருள்படும். இதைத்தவிர இந்தச் சொற்றொடரில் வேறு 'மகத்தான நேரிடைப் பொருள் இல்லை. திருமண காலத்தில் மணமகளுக்கு மணமகனால் அணிவிக்கப்படும் 'பொன்தாலி'யில் ஏதோ தெய்வீகத்தன்மை இருப்பதாக வைதீகர்கள் நம்பிக்கை கொள்கிறார்கள். அந்த நம்பிக்கை குருட்டு நம்பிக்கையாகும் என்று சீர்திருத்தக்காரர்கள் செப்புகிறார்கள்.

சங்ககாலத்தில் காட்டில் வாழ்ந்த வேட்டுவர்களும், பிற வேட்டையாடுதலில் வல்லவர்களும் தம் அருமைக் காதலிகளுக்குப் புலிப்பல்லினால் ஆன தாலியைக் கட்டிப் பார்த்து மகிழ்ந்தனர். தாம் கொன்ற புலியினது பற்களை எடுத்துக் கொண்டு வந்து அவற்றைக் கயிற்றில் கோர்த்து தமது வீரத்தின் எடுத்துக்காட்டாகவும், தமது அன்பின் அடையாளமாகவும் காதலிமார்களின் கழுத்தில் அணிவித்தனர், அதனைப் "புலிப்பற்றாலி" என்று அழைப்பார்கள். பிறகு நாளடைவில் மற்றையோரும், தாங்கள் புலியைக் கொல்லாவிட்டாலும் புலியைக் கொன்றவர்களிடமிருந்து பற்களை வாங்கிக் கயிற்றில் கோர்த்துத் தொங்கவிட்டுத் தங்கள் மனைவிமார் கழுத்தில் அணிவித்தனர். பிறகு நாளடைவில் புலிப்பற்களே கிடைக்காத நிலையில் புலிப்பற்களைப்போல் பொன்னால் செய்து தாலி என்று போட்டுக்கொண்டனர். இப்பொழுதும் பெரும்பாலான தாலிகளைப் பார்த்தால் அவை புலிப்பற்களைப் போல் அமைந்திருக்கக் காணலாம். புலியைக்கொன்று பற்களைக் கொண்டுவராத இந்தக்காலத்தில் அவற்றைப் போன்று பொன்னால் செய்து அணிவிப்பது பொருளற்ற பழக்கம் என்று சீர்திருத்தக்காரர்கள் சொல்லுகிறார்கள். 'தாலி'யோடு தெய்வீகத்தன்மையை ஒட்டவைத்திருப்பது குருட்டு நம்பிக்கையின்பாற்பட்ட மூடச்சடங்கு என்று குறிப்பிடுகிறார்கள். இத்தகைய காரணங்கள் பற்றித்தான் 'தாலி' கட்டுவது மூடச்சடங்கு என்று இந்தக்காலத்தில் சொல்லப்படுகிறது.

இந்தியாவில்
எழுதப்படிக்கத் தெரிந்தவர் நிலை

	1000-க்கு	
ராஜஸ்தானம்	84	பேர்
ஐதராபாத்	92	,,
மத்தியபாரத்	108	,,
உத்திரப் பிரதேசம்	108	,,
பெப்சு	120	,,
பீகார்	122	,,
மத்தியப் பிரதேசம்	135	,,
ஒரிசா	158	,,
பஞ்சாப்	161	,,
அசாம்	181	,,
சௌராஷ்டிரம்	185	,,
சென்னை	193	,,
மைசூர்	203	,,
மேற்கு வங்காளம்	245	,,
பம்பாய்	246	,,
திருவாங்கூர்-கொச்சி	464	,,
இந்தியா	**166**	,,

'மன்றம்' சிலோன் ஏஜண்டுகள்

1. விஜயா டிரேடிங் கார்ப்பொரேஷன்
109, நியூ மூர் தெரு,
கொழும்பு-12.

2. ஜி. ராமசாமி
தமிழ்ப்பண்ணை
யாழ்ப்பாணம், சிலோன்.



தையற் கலை

கே. பி. சுந்தரம், G.C.T.

காலர் ப்ராக்

இந்த ப்ராக் மேல்பாடியில் முன்பக்கம் யோக்கும், காலரும், முன்பக்கம் திறப்பு (ஓப்பன்)ம் தனி இடுப்புப் பட்டி (பேண்ட்)யும் கொண்டதாகும். இதற்கு முன்பக்க யோக்கில் 2 அங்குல அகலத்தில் மடிப்பு துண்டு (இப்ரீல்) வைத்தும் அல்லது யோக்கிற்கு; பயிப்பின் வைத்தும் தைக்கலாம்.

அளவுகள்

இடுப்புவரை முதுகு நீளம்	$9\frac{1}{2}$	அங்
முழு நீளம்	26	,,
மார்புச் சுற்று அளவு	22	,,
பாதித் தோள் அளவு	$4\frac{3}{4}$	,,
கை நீளம்	$5\frac{1}{2}$	,,
முன்னங்கை சுற்று அளவு	3	,,





1-ல் இருந்து 0 வரை 10 அங்.
(இடுப்புவரை முதுகு நீளம் + $\frac{1}{2}$ அங்.)
2-ல் இருந்து 0 வரை 5 அங்.
($\frac{1}{4}$ மார்பளவில் $\frac{1}{2}$ அங். குறைவு)
3-ல் இருந்து 0 வரை $1\frac{3}{4}$ அங்.
4-ல் இருந்து 0 வரை $\frac{3}{4}$ அங்.
5-ல் இருந்து 0 வரை 5 ,,
(பாதித்தோள் + $\frac{1}{4}$ அங்)
6-ல் இருந்து 5 வரை $\frac{1}{2}$ அங்.
7-ல் இருந்து 5 வரை நேர்க்கோடு இணைக்க.
8-ல் இருந்து 2 வரை $6\frac{3}{4}$ அங்.
($\frac{1}{4}$ மார்பளவு + $1\frac{1}{4}$ அங்.)
9-ல் இருந்து 1 வரை $6\frac{3}{4}$ அங்.
($\frac{1}{4}$ மார்பளவில் + $1\frac{1}{4}$ அங்.)
10-ல் இருந்து 9 வரை $\frac{3}{4}$ அங்.
11-ல் இருந்து 12 வரை 10 அங்.
12-ல் இருந்து 9 வரை 7 அங்.
($\frac{1}{4}$ மார்பளவு + $1\frac{1}{2}$ அங்)
13-ல் இருந்து 11 வரை 5 அங்.
13-ல் இருந்து 8 வரை 7 அங்.
($\frac{1}{4}$ மார்பளவு + $1\frac{1}{2}$ அங்.)
14-ல் இருந்து 11 வரை $5\frac{1}{4}$ அங்.
(பாதித்தோள் + $\frac{1}{2}$ அங்.)
15-ல் இருந்து 14 வரை $\frac{1}{2}$ அங்.
16-ல் இருந்து 14 வரை நேர்க்கோடு [இணைக்கவும்
17-ல் இருந்து 11 வரை $1\frac{3}{4}$ அங்.
18-ல் இருந்து 11 வரை $2\frac{3}{4}$ அங்.
19-ல் இருந்து 9 வரை $\frac{3}{4}$,,
A-ல் இருந்து 11 வரை 4 ,,
B-ல் இருந்து C வரை 2 அங்.
C-ல் இருந்து 12 வரை $\frac{1}{2}$ அங்.

(ஸ்கர்ட்) பாவாடையின் விளக்கம்.

20-ல் இருந்து 21 வரை $17\frac{1}{2}$ அங்.
21-ல் இருந்து 23 வரை 28 ,,
22-ல் இருந்து 20 வரை 28 ,,
23-ல் இருந்து 22 வரை $17\frac{1}{2}$,,

காலர் விளக்கம்

K ல் இருந்து 17 வரை $1\frac{1}{2}$ அங்.
(17, 18 இணைப்பு).
S-ல் இருந்து 18 வரை $2\frac{1}{2}$,,
(S, K இணைப்பு)
H-ல் இருந்து 3 வரை $1\frac{1}{2}$,,
(4, 3 இணைப்பு)
E-ல் இருந்து 4 வரை $1\frac{1}{2}$,,
(E, H இணைப்பு)

(தொடரும்)

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண் சங்கு
சீயக்காய்த்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம் - ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் வெண்சங்கு சீயக்காய்த்தூள் தொழிற்சாலை
3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

மன்றம் பதிப்பக வெளியீடுகள்

இரா. நெடுஞ்செழியன் M. A.
எழுதியவை

கண்ணீரும் செந்நீரும்	
வளர்ந்த கழகம்	0—12—0
மறைந்த திராவிடம்	0—3—0

இரா. செழியன் M. A.
எழுதியவை

ராஜாஜி ராஜா	0—12—0
பொது அறிவு	0—8—0

வியாபாரிகட்கு 25% கழிவு. முன்பணம் அனுப்பவேண்டும். வி. பி. கிடையாது

விபரங்கட்கு :

நிர்வாகி, **மன்றம் பதிப்பகம்,**
26. நைனியப்பன் தெரு,
மண்ணடி :: சென்னை-1.

சந்தாதாரர்களுக்கு

சந்தா அனுப்பும் தோழர்கள் தங்கள் முகவரியைத் தெளிவாக எழுதியனுப்ப வேண்டுகிறோம்.

சந்தா முடிவதற்குமுன் முடிவுபற்றி சந்தாதாரர்களுக்கு தெரிவித்து வருகிறோம். குறித்த நாளில் சந்தா புதுப்பிக்கப்படாவிட்டால் இதழ் நிறுத்தப்படும்.

சந்தாதாரர்கள் கடிதம் எழுதும் போதும் பணம் அனுப்பும்போதும் தங்கள் சந்தா எண்ணையும் குறிக்க வேண்டும்.

நிர்வாகி;
"மன்றம்"

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M. A., at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS-1